கலை, இலக்கியத் திங்கள் இதழ்

நவம்பர் 1973

கண் : 2 | பிரமாதீசஞு கார்த்திகைமீ 8உ (23-11-73) | ஒளி : 7

" அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு." — திருக்குறள்

# கல்வி அதிபதியின் நற்பணிகள்

**வடமாநிலக் கல்வி அதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் அவர்கள் சிறப்பாக வடமாநிலத்துக்கும் குறிப்பாகக் கல்வித்துறைக்கும் ஆற்றி வரும் பணிகளின் விளைவுகளை அதிபர்களும் ஆசிரியர்களும் பெற்றார்களும் பிள்ளைகளும் பெருமிதத்தோடு அனுபவித்து வருகின்றார்கள்.**

'நன்றாற்ற லுள்ளுந் தவறுண்டு அவரவர் பண்பறிந் தாற்றாக் கடை' என்றார் வள்ளுவர் பெருமான். அவரவருடைய இயல்புகளை அறிந்து அவரவர்க்குப் பொருந்துமாறு செயற்படாவிட்டால் நன்மை செய்வதிலும் தவறுண்டாகும் என்பது பொருள். அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றார்கள், மாணவர்கள் போன்றோரின் பிரச்சினைகளுக்குச் செவிசாய்த்து அவரவர்களுக்கேற்ப முறைசெய்து காப்பாற்றும் அதிபதியாக திரு. மாணிக்கவாசகர் விளங்குகின்றார். அத்துடன் காட்சிக்கெளியராகவும்கடுஞ்சொல்லரல்லராகவும் திகழும் விசேடத்தால் எல்லோருடைய புகழுக்கும் உள்ளாகி நிற்பதையும் காண்கின்றோம்.

### 1. அதிபர்கள் மாநாடு

வடமாநிலக் கல்வி அதிபதி அவர்கள் இவ்வாண்டுத் தொடக்கத்தில் எடுத்துக்கொண்ட முதல் நடவடிக்கைகளில் அதிபர்களைச் சந்தித்து வடமாநிலக் கல்வி நிலையையும் அதனோடு தொடர்பான பிரச்சினைகளையும் மதிப்பீடு செய்தமையும் ஒன்றாகும். முதலிலே வட்டார ரீதியாக அதிபர்களைச் சந்தித்தார். பின்னர் அதிபர்கள் மாநாடு ஒன்றைக் கூட்டினார். அவர்களுடைய பாடசாலைக் குறைநிறைவுகளை யெல்லாம் நேரடியாகவே தெரிந்துகொண்டார். அதன் விளைவாக வெளிமாகாணங்களுக்கு மாற்றம்பெற்ற விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர் பலரை நிறுத்திவைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார். ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பகுதிகளுக்கு ஆசிரியர்களை அனுப்பினார். குறிப்பாகக் கிளிநொச்சிப் பகுதிக்கும் பிற கஷ்டப் பகுதிகளுக்கும் ஆங்கிலம், விஞ்ஞானம், தொழில் முன்னிலைப் பாடம் போன்றவற்றைக் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்களை அனுப்பியிருக்கின்றார்.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர்கள் மகாநாடு ஒன்றும் கூட்டப்பட்டுப் பயிற்சிக் கலாசாலைகளின் தேவைகளும ஆசிரியர் கல்வி வசதிகளும் ஆராயப்பட்டுள்ளன. இதுபோன்ற ஒரு பயிற்சிக் கலாசாலை அதிபர்கள் மகாநாடு இதற்குமுன் நடந்ததில்லை. என்றும் பேசப்படுகின்றது.

### 2. ஆசிரியர்களுக்கு உரிய இடம்

தொழில்களுள்ளே ஆசிரியத் தொழில் மிகவும் உயர்ந்தது. எழுத்தறிவிப்பவனை இறைவனாகவே கருதி எங்கள் சமுதாயம் போற்றிவந்திருக்கின்றது. அத்தகைய பெருமைசான்ற ஆசிரியர்களை ஆசிரியர்களின் அதிகாரிகளே மதிக்காத ஒரு காலம் இருக்கவே செய்தது. கல்விக் கந்தோருக்கு ஆசிரியர்கள் சென்றால் ஏன் என்று கேட்பாருமில்லை; இருக்க ஒரு இடம் கொடுப்பாருமில்லை. வெளியிலே நின்று தூங்கி வழிந்து விரக்திப்பட்டு வீடு திரும்பிய வரலாறுகளே ஆசிரியர்கள் கண்ட 'மிச்ச'மாக இருந்தன.

இன்று அத்தகைய நிலைமைகள் எதுவுமில்லை. ஆசிரியர்களின் பெருமையுணர்ந்த, அவர்களை மதிக்கத்தெரிந்த ஒருவர் கல்வி அதிபதியாக வந்த காரணத்தால், அன்று அரசவைகளில் 'அண்ணாந்து' சென்ற புலவர்களைப்போல, இன்று வடமாநிலக் கல்வித் திணைக்களத்துக்கும ஆசிரியர்கள் உரிமையோடு சென்று பெருமையோடு திரும்பும் சூழ்நிலை உருவாகியுள்ளது. முன்பு வெளியே நிறுத்தி வைக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு இன்று உள்ளே இருக்கைகள் போடப்பட்டிருக்கின்றன. வரும் ஆசிரியர்களை வரவேற்பதுபோல 'ஆசிரியர்கள் தங்குமிடம்' என்ற அழகான அறிவித்தல் ஒன்று ஆறுதலளிக்க அதன் கீழே இருக்கைகள் இடப்பட்டிருக்கின்றன. கல்வி அதிபதி அவர்களின் தொழில் மகத்துவ உணர்வையும் மனிதாபிமான நோக்கையும் இந்த ஒரு செயலே எடுத்து விளம்பக் காணலாம். பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலே நடாத்தப்பெற்ற புலவர் தமிழ்மாறனின் 'பெரியாஸ்பத்திரியில் இந்திரன்' என்ற நூல் வெளியீட்டு விழாவில் கல்வி அதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் அவர்கள் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையில் 'மனிதனை மனிதாபிமானத்தோடு அணுகுதல்வேண்டும்' என்று குறிப்பிட்டார். அது வெறும் வாய்ச்சொல்லன்று. கல்வித் திணைக்களத்தில் ஆசிரியர்களை உபசரிக்கும் பண்பால் அவரே அதனைச் செயலிலும் காட்டிவருகின்றார்.

### 3. ஆசிரியர் ஆலோசனைச் சபை

அதுமட்டுமன்று. ஆசிரியர்களுடைய பிரச்சினைகளை அறியவும், அவற்றைத் திருத்தவும், அவர்களது நலன்களைப் பேணவும ஆசிரியர் ஆலோசனைச் சபை ஒன்றினைக் கல்வி அதிபதி அவர்கள் உருவாக்கியுள்ளார். இதுவும் இதுவரையில்லாத ஒரு முதல் முயற்சியேயாகும். இச்சபையில் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கின்றனர்.

### 4. புத்தூக்க வகுப்புக்கள்

ஆசிரியர்களுடைய வினைத்திறமைகாண் தடைகளுக்குஉதவுதற்பொருட்டுக் கல்வி அதிபதி அவர்கள் பல புத்தூக்க வகுப்புக்களை ஒழுங்குசெய்து வட்டாரக் கல்வி அதிகாரிகளை ஊக்குவித்திருக்கிறார்கள். இவற்றுட் பெரும்பாலானவை வட்டார ரீதியிலும் சில விசேடபாடப் புத்தூக்க வகுப்புக்கள் பிரதேச ரீதியிலும் நடாத்தப்பட்டன. இவ்வகுப்புக்கள் மனங்கொண்டு, அவற்றின் நோக்கங்கள் நன்கு நிறைவெய்துதற்பொருட்டு நடாத்தப்பட்டமை சிறப்பாகக் குறிப்பிடப்படவேண்டிய ஒரு அமிசமாகும். அவற்றின் நன்மைப்பாடுகள் குறித்து அவற்றிலே கலந்துகொண்ட ஆசிரியர்கள் எல்லோருமே மனநிறைவு பெற்றிருத்தல் திண்ணம். மாறிவரும் கல்விக் கோட்பாடு, எமது நாட்டுப் புதிய கல்வித்திட்டம், புதிய கல்விச் சட்டதிட்டங்கள், நிர்வாக அமைப்பு வசதிப்பணத்தைச் செலவிடும் முறையும் கணக்குவைக்கும முறையும், கற்பித்தல் முறைகள், குழந்தை உளவியல், வழிகாட்டற்சேவை, லீவு எடுக்கும்முறை, ஆசிரியர் கடமைகள் என்று பலதரப்பட்ட பயனுள்ள விடயங்கள் பற்றி இப்புத்தூக்க வகுப்புகளில் தகைமைவாய்ந்தவர்களால் எடுத்துரைக்கப்பட்டன. கல்விக்கோட்பாட்டிலும் கற்பித்தல் முறையிலும் பரீட்சிக்கும் முறையிலும் உண்மையிலேயே மாற்றங்கள் பல ஏற்பட்டிருக்கின்றன. எங்களுட் பலர் இன்னும் பழையபாணியில் அரைத்த மாவையே அரைத்துக்கொண்டிருக்கின்றார்கள். இவர்களையெல்லாம் தக்க பாதையிலே இட்டுச்செல்லவும் ஆசிரியர் சேவையால் காலத்தின் தேவைக்கேற்பப் பலனைப் பெறவும் இப்புத்தூக்க வகுப்புகள் பயன்படும்வகையில் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தன; இன்னும் ஒழுங்குசெய்யப்பட்டு வருகின்றன.

### 5. கருத்தரங்கங்கள்

இதுவரைகாலமும் நேர்முகப் பரீட்சைமூலம் சேவைமூப்பு அடிப்படையில் வழங்கப்பட்டுவந்த அதிபர் பதவிகள் இனிமேல் எழுத்துப் பரீட்சைமூலம் திறமை அடிப்படையில் வழங்கப்படல் வேண்டும் என்று ஆசிரியர் சங்கங்கள் பல வற்புறுத்தி வந்தன. இதற்கேற்பக் கல்வி அமைச்சு நான்காம் ஐந்தாம் தர அதிபர் பதவிகளுக்குப் போட்டிப் பரீட்சை ஒன்றை நடாத்தத் தீர்மானித்து விண்ணப்பங்களைக் கோரியது. இதுபோன்ற பரீட்சைஒன்று இப்பொழுதுதான் முதன் முறையாக நடைபெறவிருக்கின்றது. ஆதலால் விண்ணப்பதாரர்களுக்கு உதவுமுகமாகக் கல்வி அதிபதியவர்கள் ஆசிரியர் சங்கங்களைக்கொண்டு பல கருத்தரங்கங்களை நடாத்துவித்தார்கள்.

இதுபோன்ற பல கருத்தரங்கங்களை ஸ்ரீலங்கா கல்விச்சேவை ஐந்தாம்நிலைப் போட்டிப் பரீட்சைக்கும் ஆசிரியர் சங்கக் கூட்டுச் சபையுடன் இணைந்து கல்வித் திணைக்களம் நடாத்தியது.

இவை, ஆசிரியர்களின் முன்னேற்றங்களில் வடமாநிலக் கல்வி அதிபதி காட்டிவரும் ஆர்வத்துக்கும் எடுத்துவரும் நன்முயற்சிகளுக்கும் சில எடுத்துக் காட்டுகள்.

### 6. ஆசிரியர்சங்கங்கள்

மேற்போந்த சில உதாரணங்களிலிருந்து கல்வி அதிபதி அவர்கள் ஆசிரியர் சங்கங்களுக்கு அளித்துவரும் முக்கியத்துவமும் நன்கு வெளிப்படையாகின்றது. ஆசிரியர் ஆலோசனைச் சபையிலும் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகள் அங்கம்வகிக்கின்றனர். ஆசிரியர் சங்கங்களின் எந்த நன்முயற்சிக்கும் கல்வி அதிபதி அவர்கள் முன்னின்று உதவியிருக்கின்றார்கள்; ஊக்குவித்துவருகின்றார்கள். ஆசிரியர் சங்கங்களுக்கிடையே ஒற்றுமையையும சங்கங்களுக்கும் கல்வித் திணைக்களத்துக்குமிடையே நல்லுறவையும் வளர்த்துவரும் பெருமை கல்வி அதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் அவர்களுக்கேயுரியது. கல்வித் திணைக்களத்துக்கும் ஆசிரியர் சங்கங்களுக்குமிடையிலே இப்பொழுது நிலவுவதுபோன்ற இனிய நல்லுறவு இதற்குமுன் என்றும் இருந்ததில்லையென்றே ஆசிரியர் சங்கப் பிரமுகர்கள் பல

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

## சைக்கிள் வண்டி

"வண்ணை முத்து"

இரண்டு சக்கர வண்டி
இரும்பா லான வண்டி
மிதித்தே ஓட்டும் வண்டி
மிகவும் சின்ன வண்டி
சந்தில் பொந்தில் செல்லும்
சாலை நெடுகச் செல்லும்
பகலும் இரவும் செல்லும்
பலரும் ஓட்டும் வண்டி

குதிரை எருது துன்பம்
குறைக்க வந்த வண்டி
நிதமும் தீனி கேளா
நேர்த்தி யான வண்டி

ஓட்டப் பந்தயம் ஓடும்
உலகம் சுற்ற உதவும்
நாட்டில் எங்கும் காணும்
நல்ல சைக்கிள் வண்டி.

# கலை சமைப்போம் உயர் நிலை அமைப்போம்

கலைக்கண்

பிரமாதீசஞு கார்த்திகைமீ 8உ (23-11-73)

# பார்வை

## தனித்துவம்

உலகெங்கும் தமிழ் பரவியிருப்பினும் உலகின் பல பாகங்களிலும் தமிழர் வாழினும் இடத்துக்கு இடம் தமிழருடைய கலைகளும் கலாசாரங்களும் சில சில வேறுபாடுகளைக் கொண்டிருக்கின்றன என்பது நாம் ஒப்புக்கொள்ளவேண்டிய உண்மைகள் ஆகும். இந்த வேறுபாடுகள் இயல்பாக நிகழக்கூடியவை யாகவும் தவிர்க்கமுடியாதவையாகவும் உள்ளன.

இந்த வேறுபாடுகள் தேசத்துக்குத் தேசம் இடத்துக்கு இடம் வேறுபட்டிருக்கும் தமிழருடைய தனித் தன்மையைக் கண்டுகொள்ள உதவியாக உள்ளன.

காலவரையறையற்ற கிராமியப் பாடல்களைப் பொறுத்தவரையில் அவற்றின் உட்பொருளில் ஒற்றுமையிருப்பினும் அவற்றின் நடையில் எந்த நாட்டுக் கிராமியப்பாடல் என்று கூறக்கூடிய தனித் தன்மையை நாம் காண முடியும்.

ஒரு காலத்தில் ஈழத்துச் சிறுகதை ஆசிரியர்களும் நாவல்ஆசிரியர்களும் சிறுகதைகளிலும்நாவல்களிலும் இந்தியப் பேச்சுமொழியையே பெரிதும் கையாண்டனர். பாத்திரங்களுக்குக்கூட இந்தியப் பெயர்களையே வைத்தனர். இன்று அந்த நிலை மாறி ஈழத்தின் தனித் தன்மையைக் காட்டக்கூடிய சிறுகதைகளும் நாவல்களும் தோன்றுதல் வரவேற்கத்தக்கதே.

புதியனவற்றை வரவேற்கும் அதேநேரத்தில் பழையனவற்றையும் பேணும் முயற்சிகள் இன்று ஈழத்திற் கொள்ளப்படுவது பெருமகிழ்ச்சிதரும் ஒன்ருகும்.

ஈழத்தின் தொன்மைக்கலைகளையும் அவற்றின் தனித் தன்மையையும் புலப்படுத்துதற்குவேண்டிய நல்லபல முயற்சிகளை இன்று இலங்கை வானெலி மேற்கொண்டு வருவது பாராட்டப்படவேண்டிய ஒன்ருகும்.

கலைக்கண்ணில் திரு. த. சண்முகசுந்தரம் B. A. அவர்கள் எழுதிவரும் கலைமரபு தொடர் கட்டுரை இன்றும் எதிர்காலத்தும் ஈழத்தின் தனித்தன்மையை அறிய விழைவோருக்கு உதவும் ஒன்ருகும்.

ஈழத்தின் கலைகளினதும் கலாசாரங்களினதும் தனித்தன்மையை உலகினர்க்கு எடுத்துக்காட்டக் கூடிய நல்லதொரு சந்தர்ப்பம் இப்போது ஏற்பட்டிருக்கின்றது.

அதுதான் விரைவில் நிகழவிருக்கும் உலகத் தமிழ் மாநாடு. இந்த மாநாடு ஈழத்தின் தொன்மை இலக்கியங்களையும் தொன்மைக் கலைகளையும் அவற்றின் தனித்தன்மையையும் உலகறியச் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிறுகதை நாவல் போன்ற இலக்கியத்துறையிலும் கலைத்துறையிலும் உலக தமிழரின் வளர்ச்சியோடு ஈழத்துத் தமிழரின் வளர்ச்சி எந்த அளவில் உயர்ந்து நிற்கின்றது என்பதைத் தெரியப்படுத்த நல்லதோர் சந்தர்ப்பமாகும்.

இந்தச் சந்தர்ப்பம் ஈழத்துக்குப் பெருமைதரும் எனவும் நாம் எதிர்பார்க்கிருேம்.

கலைக்கண்ணின் தரம் இதழுக்கு இதழ் உயர்ந்து கொண்டு வருவதாக வாசகர்கள் பலர் கடிதம் எழுதி இருக்கிருர்கள். அவர்கள் கலைக்கண்ணுக்குத் தரும் ஊக்கத்துக்கும் ஆதரவுக்கும் நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கிருேம்.

கலைக்கண்ணின் அளவைப்பற்றிக் குறிப்பிட்ட பலர் இப்போது வரும் அளவிலும் பார்க்கச் சஞ்சிகை அளவில் வருவது சிறப்பு என்று எழுதியிருந்தார்கள். கலைக்கண்ணைப் பலகாலத்துக்குப் பேணி வைத்திருப்பதற்கு வசதியாகும் என்றும் குறிப்பிட்டிருந்தார்கள். அவர்களின் அபிப்பிராயங்களை விரைவில் ஏற்று மாற்றம் செய்ய எண்ணியுள்ளோம்.

கலாநிதி க. கைலாசபதி அவர்களின் பாரதியாரும் பாடபேதங்களும் என்ற சிறப்புக் கட்டுரையின் மூன்ரும் பகுதி இவ்விதழில் இடம்பெறுகிறது. திரு. த. சண்முகசுந்தரம் B. A. அவர்களின் கலைமரபு தொடரில் கரகக்காவடிக் கலைஞரின் நேர்முக உரை சிறப்புற அமைந்துள்ளது. திரு. வி. சிவசாமி M. A. அவர்களின் ஆய்வுக்கட்டுரையும், திரு. ஆ. சிவநேசச்செல்வன் B. A. (Hons.) அவர்களின் சொற்பொழிவின் சுருக்கமும் சிறப்புற அமைந்தள்ளன. மற்றும் கவிதை, அறிந்ததும் அறியாததும் போன்ற வழமையான அம்சங்களும் இடம்பெற்றுள்ளன.

# கல்வி அதிபதியின் நற்பணிகள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரும் பெருமையுடன் பேசிக் கொள்கின்றனர்.

### 7. திடீர்ப் பரிசோதனைகள்

திடீர்ப் பரிசோதனைகள் என்ருல் காதுக்குக் கொஞ்சம் கசப்பாகத்தான் இருக்கும்; மனத்துக்கும் வேதனையைத் தரக்கூடும். ஆனுல் முறையாகத் தமது கடமையைச் செய்யும் ஆசிரியர்கள் திடீர்ப் பரிசோதனைபற்றி அஞ்சமாட்டார்கள்.

கல்வி அதிபதி அவர்கள் தமது கல்வி அதிகாரிகள் குழுவுடன் பாடசாலைகளில் திடீர்ப்பரிசோதனைகள் பலவற்றை நடாத்தியிருக்கின்ருர்கள். இதனைப் பல 'சங்கதிகளை' கல்வித்திணைக்களம் நேராகவே அறிந்துகொள்ள முடிந்தது.

திடீர்ப் பரிசோதனைகள் அதிபர்கள்மீது குறைகண்டு பிடிக்கவோ, ஆசிரியர்கள் மீது குற்றங்காணவோ செய்யப்படுவனவல்ல பாடசாலைகளில் வேலைகள் ஒழுங்காக நடைபெறுகின்றனவா என்பதையும் வசதிகள் போதியளவு உள்ளனவா என்பதையும் நேரடியாகக் கண்டறிதலே இப்பரிசோதனைகளின் நோக்கமாகும். குறைபாடுகள் இருப்பின் அவற்றுக்கான காரணங்களை அதிபர்களுடனும் ஆசிரியர்களுடனும் கலந்தாலோசித்து அவற்றைக் களைவதற்கான பரிகார வழிகளை வகுத்தலே திடீர்ப்பரிசோதனைகளின் குறிக்கோளாகும்

கல்வி அதிபதி அவர்கள் செய்வன திருந்தச்செய்பவர். திடீர்ப் பரிசோதனைகளை முடித்துக்கொண்டு அவர் சும்மா இருக்கவில்லை. திடீர்ப் பரிசோதனை செய்யப்பட்ட ஒவ்வொரு பாடசாலைக்கும் அப்பாடசாலை நிலைபற்றிய ஒரு தெளிவான அறிக்கையை அனுப்பிவைத்துள்ளார். அதிலே சிறப்பான வேலைப்பாடுகளுக்குப் பாராட்டுகளும் குறைபாடுகளும் அக்குறைபாடுகளுக்கான காரணங்களும் அவற்றைத் தவிர்ப்பதற்கான வழிவகைகளும் எடுத்துக்கூறப் பட்டுள்ளன.

திடீர்ப் பரிசோதனைகள் உண்மையிலேயே வடமாநிலப் பாடசாலை அதிபர்கள் தங்கள் பொறுப்புகளை உணரவும் ஆசிரியர்கள் தங்கள் கடமைகளைச்செவ்வனே புரியவும் உதவியுள்ளன. மொத்தத்தில் பாடசாலைகளின் கல்வித்தரத்தை உயர்த்த இப்பரிசோதனைகள் வழிசமைத்துள்ளன.

### 8. புதிய கல்வித்திட்டம்

கல்வி அமைச்சினுல் புதிய கல்வித் திட்டம் 1972ஆம் ஆண்டுமுதல் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. புதிய கல்வித் திட்டத்தின் வெற்றி அதனை நடைமுறைப் படுத்துபவர்கள் கையிலேயே தங்கியுள்ளது. கல்விக்குப் பெயர் பெற்ற வடமாநிலத்தில் இத்திட்டம் செயற்படும் முறையையும் அளிக்கும் பலாபலன்களையும் இலங்கை முழுவதுமே அறிய ஆவலாகவுள்ளது. வடமாநிலக் கல்வி அதிபதி அவர்கள் புதிய கல்வித் திட்டத்தைச் செவ்வனே செயற்படுத்துவதில் கண்ணுங் கருத்துமாக இருந்து வருவது யாவரும் அறிந்ததொன்றே. புதிய கல்வித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கென்று ஒரு விசேட செயற்குழுவையும் அவர் நியமித்திருக்கின்ருர். இந்தச் செயற்குழுவிற் பின்வருவோர் அங்கம்வகிக்கின்றனர்:

தலைவர் :

திரு. தி. மாணிக்கவாசகர் —கல்வி அதிபதி

உறுப்பினர்கள் :

1. திரு. A. சுபசிங்கா —பிரதம கல்வி அதிகாரி
2. திரு. E. V. இராமநாதன் —கைப்பணிப்பாடக் கல்வி அதிகாரி
3. திரு. பொ. ச. குமாரசுவாமி —கல்வி அதிகாரி
4. செல்வி T. பெரியதம்பி -வட்டாரக் கல்வி அதிகாரி (விவசாயம்)
5. திரு. M. அற்புதநாதன் —வட்டாரக் கல்வி அதிகாரி (விஞ்ஞானம்)
6. திரு. கு. சோமசுந்தரம் —யாழ்ப்பாண வட்டாரக் கல்வி அதிகாரி
7. திரு. V. இராசநாயகம் —உடுவில் வட்டாரக் கல்வி அதிகாரி

### 9. தொழில்முன்னிலைப் பாடநெறி

புதிய கல்வித் திட்டத்தில் தொழில்முன்னிலைப் பாடங்கள் மிகவும் முக்கியமானவையாகும். இதுவரைகாலமும் நாட்டுவளத்தைக் கொண்டு எம்மவர்கள் வாழ்ந்தனர். இனி எமது திறனைக்கொண்டு நாட்டை விருத்தி செய்ய வேண்டும். நாட்டை விருத்திசெய்தாற்தான் ஒளிமயமான ஒரு எதிர் காலத்தை அனுபவிக்க முடியும்.

நாட்டு வளங்களை அறியவும் அவற்றைப் பயன்படுத்தி நாட்டை வளர்க்கும் முறைகளின் அடிப்படை அனுபவங்களைப் பெறவும் தொழில் முன்னிலைப் பாடங்கள் வழி வகுக்கின்றன. இப்பாடங்களின் முக்கியத்துவத்தை ஆசிரியர்கள் உணர்ந்திருக்கும அளவுக்குப் பெற்ருேர்களோ பிள்ளைகளோ உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை. அதனுற்ருன்போலும் கல்வி அதிபதி அவர்கள் செல்லும்இடமெல்லாம் புதிய பாடத்தில் தொழில்முன்னிலைப் பாடங்கள் வகுத்து வரும் முக்கியத்துவத்தைப் பொதுமக்களுக்கு விளக்கி வருகின்ருர்.

தொழில்முன்னிலைப் பாடநெறியின் வளர்ச்சிப் படிகளை மதிப்பீடு செய்யுமுகமாகவும் வருங்கால வளர்ச்சி நிலைகளை முன்னறியும் முயற்சியாகவும் முதலில் வட்டார ரீதியில் பொருட்காட்சிகள் நடாத்தப் பட்டன. இக்காட்சிகளிலே தெரிவுசெய்யப்பட்ட சிறந்த கைப்பணி, விஞ்ஞானப் பொருட்கள் பிரதேச ரீதியாக யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியிலும், மத்திய கல்லூரியிலும நடாத்தப் பட்ட பொருட்காட்சியில் இடம்பெற்றன. இக்காட்சியினைத் திறந்துவைத்துப் பார்வையிட்ட உதவிக் கல்வி மாஅதிபதி திரு. சிறிசேஞ பொருட்காட்சியின் உயர்தரத்தைக் குறிப்பிட்டு, தொழில்முன்னிலைப் பாடங்களை ஆர்வத்துடன் புகட்டும் ஆசிரியர்களையும் ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் இத்துறையில் ஊக்கமளித்து வரும் வடமாநிலக் கல்வி அதிபதியையும் பாராட்டிச் சென்றிருக்கின்ருர்.

### 10. கல்விச் செயலகம்

யாழ்ப்பாணத்திற் சகல வசதிகளோடும் கூடிய ஒரு கல்விச் செயலகம் ஒன்றை அமைப்பதற்கான ஆரம்ப முயற்சிகள் 1966ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் பட்டது. எனினும் இத்திட்டம் இன்று வரை செயற்படவில்லை. கல்வி அதிபதி திரு. மாணிக்கவாசகர் அவர்களின் அயராத முயற்சியினுற் கல்விச் செயலகம் அடுத்த ஆண்டு கட்டப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது இது அவரது முயற்சிகளுள்ளே மகத்தானதென்றே கொள்ளல்வேண்டும். இப்போதுள்ள வசதிக் குறைவான கட்டடங்களில் பல இன்னற்பாடுகளுக்கிடையிலேயே கல்வி அதிகாரிகளும், நிர்வாகிகளும், எழுதுவினைஞர்களும் பணியாற்றுகின்றனர்என்பதுயாவரும் அறிந்ததொன்று. இந்த இடர்ப்பாட்டை நீக்கி நவீன கல்விச் செயலகம் ஒன்றைக் கட்டுவிக்க முயற்சியெடுத்து அதில் வெற்றியும் பெற்ற கல்வி அதிபதி அவர்களை எவ்வளவு பாராட்டினுலுந் தகும். இக் கட்டிடத்துக்கு மத்திய கட்டிடக் குழு அங்கிகாரம் வழங்கியுள்ளது. இப் புதிய கல்விச் செயலகத்தைக் கல்வியமைச்சர் 1974ஆம் ஆண்டு திறந்துவைப்பார் என்றும் எதிர்பார்க்கப் படுகின்றது.

இவ்விதம் கல்வித்துறையில் வடமாநிலக் கல்வி அதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் அவர்களின் திடமான நற்பணிகள் செம்மையான பல விளைவுகளை ஏற்கனவே உருவாக்கி வருவதைக் காண்கின்ருேம். இதற்கெல்லாம் காரணம் அவரது அயராத உழைப்பும் ஆன்ற குணப் பண்புமாகும். சமரசப் பேச்சாலும் சாத்விக மனப் பான்மையாலும் எல்லோர் மத்தியிலும் தகுந்த நல்லுறவை வளர்த்துத் தனது திட்டங்களை—அரசாங்கத்தின் கல்வித் திட்டங்களை அமுலாக்கி வருகின்ருர்.

வடமாநிலத்தின் கல்வி வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு நாளும்பொழுதும் அயராது உழைக்கின்ற ஒரு பெருமகனைக் கல்வி அதிபதியாகப் பெற வடமாநிலம் உண்மையிலேயே தவஞ் செய்திருத்தல்வேண்டும் மனதார உழைக்கவல்ல திறமைசான்ற, கல்வித் துறைக்குப் பொருத்தமான ஓர் உயர்ந்த ஒழுக்கசீலரைக் கல்வி அதிபதியாக எமக்குத் தந்த கல்வி அமைச்சரையும் அரசாங்கத்தையும் நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்ருேம்.

சி. சதாசிவம்
கலைக்கண் நிருபர்

அறிஞர் க. சி. குலரத்தினம் அவர்களின் 'ஆங்கிலப் புலமை' தொடர் கட்டுரையைப் பெற்றுக்கொள்வதில் சிறிது காலதாமதம் ஏற்பட்டமையால் இவ்விதழில் பிரசுரிக்க இயலவில்லை. அடுத்த இதழில் இடம்பெறும்.

# பாரதி பாடல்களிற் பாட பேதங்கள்-3

> "பாரதியார் பதிப்புக்களிலே காணப்படும் பாடபேதங்கள் அனைத்தையும் அடக்கிய மூலப்பதிப்பு ஒன்று இன்றைய நிலையில் இன்றியமையாததாகும். இதன் பின்னரே வேறு துணைச் சான்றுகளின் உதவியுடன் ஆராய்ச்சி பூர்வமான சுத்தப் பதிப்பு ஒன்றை ஒருவர் தயாரித்தல் சாத்தியமாகும்."

கலாநிதி க. கைலாசபதி
தமிழ், திராவிட இயற்துறை முதல்வர்
வித்தியாலங்கார வளாகம்

பாரதியார் கவிதைகளிலே பாடபேதங்கள் ஏற்படுவதற்கான காரணங்களில் ஒன்று அவர் வாழ்நாளிலும் அவர் மறைந்த பின்னும் அவரது நூல்கள் சில வெளியிடப்பட்ட விதமாகும். அவர் இறந்தபின்னரே அவரது கவிதைகள் பெருநூல்களாகத் தொகுக்கப்பெற்றன. இதனால் கவிஞரே அவற்றைச் சீராக வெளியிடும் வாய்ப்பிருக்கவில்லை. இது முக்கியமான காரணமாகும். அவர் வாழ்நாளில் வெளிவந்த சில நூல்களையும் நேரடியாக அவரே மேற்பார்வை செய்யும் வாய்ப்பும் குறைவாகவே இருந்தது. உதாரணமாகப் பாரதியார் இயற்றிய பாடல்களை முதன்முதலில் நூல்வடிவில் வெளிப்படுத்தியவர் வி. கிருஷ்ணசாமி ஐயர். 1907ல் 'ஸ்வதேச கீதங்கள்' என்னும் பெயரிற் பாரதியாரின் பாடல்கள் மூன்றை அவர் இலவச வெளியீடாகப் பிரசுரஞ்செய்தார். இதில் அடங்கிய "வந்தே மாதரமென்போம்" என்ற கீதத்தின் இறுதிப் பா இப்பொழுது புழக்கத்திலிருக்கும் பதிப்புக்களிற் காணப்படவில்லை. முதற்பதிப்பிலே பாடலின் ஆறுவது சரணமாக,

தேவி நம் பாரதபூமி—எங்கள்
தீமைகள் யாவையுந்தீர்த்தருள் செய்வாள்
ஆவியுடல் பொருள் மூன்றும்—அந்த
அன்னை பொற்றுளினுக் கர்ப்பிதமாக்கி
(வந்தே)

என்பது இடம்பெற்றிருந்தது. ஆனால் 1919ல் நெல்லையப்பர் வெளியிட்ட 'நாட்டுப் பாட்டு' என்ற தொகுதியிலே இந்தச் சரணத்தைக் காணவில்லை. பின்வந்த பதிப்புக்களில் முதற்பதிப்பில் இல்லாத "புல்லடிமைத் தொழில் பேணி" என்று தொடங்கும் பா இடம்பெற்றுள்ளது. சித்திரபாரதி என்னும் நூலிலே ரா. அ. பத்மனபன் கூறுவது போல, "பாரதியாரே பாடல்களைக் கூட்டிக் குறைத்துத் திருத்தினரோ என்பது ஆராய்ச்சிக்குரிய விஷயம்".

கவிஞர்கள் தாம் இயற்றிய பாடல்களைத் திருத்தியோ மாற்றியோ அமைப்பது சாதாரணமாய்க் காணக்கூடியதொன்றே. பாரதியாரும் பல பாடல்களைக் கூட்டியும் குறைத்தும் சிற்சில மாற்றங்கள் செய்திருக்கிறார் என்பதும் தெளிவு. ஆனால் இம்மாற்றங்கள்பற்றியகுறிப்புக்கள் முந்திய பதிப்புக்களில் ஒழுங்காகக் கொடுக்கப்படாமையே மயக்கத்தை உண்டாக்குகிறது. குறிப்பாகத் தேசபக்தியைப் பொருளாகக் கொண்ட பாடல்களிலே பதிப்புக்குப் பதிப்பு வேறுபாடுகள் காணப்படுகின்றன. இது அக்காலச் சூழ்நிலை காரணமாக ஏற்பட்டிருக்கலாமோ என்னும் எண்ணமும் தோன்றுகிறது.

உதாரணமாக 1907ல் கிருஷ்ணசாமி ஐயர் வெளியிட்ட சிறு நூலை அதற்கடுத்த ஆண்டில் பாரதியார் சற்றுப் பெரிய அளவில் வெளியிட்டார். இப்பதிப்பில் பதினன்கு பாடல்கள் இருந்தன. இதன் இரண்டாம் பாகம் 1909ல் 'ஜன்மபூமி' என்ற பெயரில் வெளியாயிற்று. இதன்பின் சுமார் பத்து வருடங்களாகப் பாரதியார் கவிதைகள்—குறிப்பாகத் தேசபக்திப் பாடல்கள் – தனி நூலாக வெளிவரவில்லை.

சிலகாலம் புதுவையிலே பாரதி குழாஅத்திலே ஒருவராக இருந்து கவிஞரால் வாஞ்சையுடன் "தம்பி" என்றுஅழைக்கப்பட்டவரான நெல்லையப்பர் சென்னை திரும்பியபின் உலகமறியாது உறங்கிக் கிடக்கும் கவிஞரது நூல்களை வெளிக்கொணரப் பெருமுயற்சிகள் செய்தார். அரசியல் சம்பந்தமான 'ஸ்வதேச கீதங்கள்' என்னும் நூலை அப்படியே வெளியிடத் தயங்கிய நெல்லையப்பர் 'தேசிய கீதங்கள்' போன்ற தலைப்புக்களைத் தவிர்த்து, 'நாட்டுப் பாட்டு' என்று பெயரிட்டுச் சில பாடல்களை 1917ல் வெளியிட்டார். அரசாங்கத்தின் அநுமதியுடன் வெளியிடப்பட்ட இந்நூலில் இடம்பெருத (தீவிரமிக்க) பாடல்கள் சிலவற்றைத் தனியாக அச்சடித்து நூலை விநியோகிக்கும்பொழுது இரகசியமாகச் சேர்த்து அனுப்பிவந்தாராம். நெல்லையப்பரே 1918ல் 'கண்ணன் பாட்டு' என்னும் நூலையும் வெளியிட்டார். இவை பாரதியின் மேற்பார்வையின்றிச் சிரமமிகுந்த சூழ்நிலைகளில் நண்பர்களால் வெளியிடப்பெறறவை. இக்காரணத்தினாலும் பாடல்களில் பாடபேதங்கள் எழுந்திருக்கலாம் எனக் கருதல் தவருகாது. பாடல்கள் கூடிக் குறைவதற்கும் இது ஒரு காரணமாய் இருந்திருக்கலாம்.

உதாரணமாக 1929ல் பாரதி பிரசுராலயம் வெளியிட்ட 'பாரதி நூல்கள்—கவிதை' என்னும் தொகுதியில் உள்ள 'ஜயபாரத' என்னும் பாடல், நெல்லையப்பர் வெளியிட்ட 'நாட்டுப் பாட்டு' என்னும் நூலில் வேறுபட்டுக் காணப்படுகிறது. "சிறந்து நின்றசிந்தையோடு" என்று தொடங்கும் அக்கவிதையின் பிந்திய பதிப்புக்களில் "தேவருண்ணும் நன்மருந்து" எனத் தொடங்கும் பாடற்பகுதி காணப்படுகிறது. நெல்லையப்பர் பதிப்பில் இப்பகுதி எவ்வாறு விடப்பட்டது என்பதை அறியுமாறில்லை. இத்தகைய வினக்களுக்கு மூலபாடத் திறனய்வின் மூலமாகவே விடை காண முடியும்; ஆனால் பாரதியாரே செய்த சில மாற்றங்களுக்கும் உதாரணம் காட்டலாம். "வந்தே மாதரம் – ஜய வந்தே மாதரம்" என்று தொடங்கும் பாடல் முதலில் 'இந்தியா' என்ற பத்திரிகையில் வெளிவந்தபொழுது, ஆறு சரணங்கள் இருந்தன. ஆனல் 1908ல் கவிஞரே வெளியிட்ட 'ஸ்வதேச கீதங்கள்' தொகுதியில் இப்பொழுது உள்ளதுபோல் நான்கு சரணங்களே இடம்பெற்றன. சென்னை அரசாங்கப் பதிப்பிலே கூறப்பட்டிருப்பதுபோல, "இரண்டு சரணங்களை அவரே விட்டதற்குக் காரணம் விளங்கவில்லை." ஆயினும் முறையாக இதனை ஆராயந்தால் காரணம் புலப்படாமற்போகாது. அதுதான் மூலபாடத் திறனய்வின் பயன்.

கவிஞர்கள் தமது பாடல்களைக் காலத்துக்குக்காலம் திருத்தியமைப்பது தனியாக ஆராயப்படக்கூடிய பொருளாகும். அதேவேளையில் மூலபாடத் திறனய்வும் அதற்குத் துணைபுரியும். மேனட்டுக் கவிஞரான வால்ட் விட்மன் (1819–1892) இங்கு நோக்கத்தக்கவர். அவர் வாழ்நாளிலேயே புல்லின் இதழ்கள் (Leaves of Grass) என்ற அவரது பிரசித்தி பெற்ற நெடும்பாடல் ஒன்பது முறை பதிப்பிக்கப்பெற்றது. ஒவ்வொருபதிப்பிலும்கவிஞர் பற்பல மாற்றங்களைச் செய்தார்; சில பாடல்களை நீக்குவார்; சிலவற்றை விரித்து எழுதுவார்; சிலவற்றைச் சிறு பகுதிகளாகப் பிரித்து அமைப்பார். சிலவற்றுக்குப் புதிய தலைப்புகள் அளிப்பார். இதனல் ஒவ்வொரு பதிப்பும் தனித்தன்மை கொண்டதாய் இருக்கும். அவர் இறப்பதற்கு முன் இறுதியாக 1892ல் தயாரித்த பிரதியே இக்காலத்தில் 'உத்தியோக பூர்வமான' பதிப்பாகக் கொள்ளப்படுகிறது. எனினும் 1902ல் ஓ. எல். திறிக்ஸ் என்பார் பாடபேதங்கள் அனைத்தையும் கொடுக்கும் "Variorum Readings of Leaves of Grass" பதிப்பை வெளியிட்டார். விட்மன் கவிதைகளின் 'சுத்தப்பதிப்பு' பின்னர் பல ஆராய்ச்சியாளரின் கூட்டுமுயற்சியால் வெளிவந்துள்ளதெனினும் முற்கூறிய 'பாடபேதவளப் பதிப்பு' ஆராய்ச்சியாளருக்கு இன்றுவரை பெரிதும் பயன்படுவதாயிருக்கிறது. இந்நூல் வெளிவந்ததன் பின்னரே விட்மன் கவிதைகள் வளர்ந்த வரலாறு நுட்பமாக ஆராயப்படலாயிற்று. இதுபோன்று பாரதியார் கவிதைகளிற் (பதிப்புக்களிலே) காணப்படும் பாடபேதங்கள் அனைத்தையும் (இடைச்செருகல்கள் உட்பட) அடக்கிய மூலப் பதிப்பு ஒன்று இன்றைய நிலையில் இன்றியமையாததாகும். இதன்பின்னரே வேறுதுணைச் சான்றுகளின் உதவியுடன் ஆராய்ச்சிபூர்வமான 'சுத்தப் பதிப்பு' ஒன்றை ஒருவர் தயாரித்தல் சாத்தியமாகும்.

பாரதியார்கவிதைகள்பதிப்பிக்கப்பெற்ற வரலாற்றை நோக்கும்பொழுது இன்னும் ஒரு செய்தியும் நினைந்து கொளத்தக்கது. தமிழ் நாட்டிலே மட்டுமன்றி, வேறிடங்களிலும் சில தொகுதிகள் வெளியிடப்பெற்று இருக்கின்றன. உதாரணமாக, 1914ல் தென்ஆபிரிக்காவிலே 'தேசிய கீதங்களும் பிற பாடல்களும்', 'மாதா மணிவாசகம்' ஆகிய இரு நூல்கள் வெளிவந்தன. 1908ல் பாரதியார் வெளியிட்ட 'ஸ்வதேச கீதங்கள்', பின்னர் வெளியிட்ட 'ஜன்மபூமி' என்ற இரு தொகுதிகளையும் ஆதாரமாய்க் கொண்டு 'தேசியகீதங்களும் பிறபாடல்களும்' என்னும் நூலும், 1910ல் புதுவையிலே பாரதியார் வெளியிட்ட 'மாதாவாசகம்' என்னும் தொகுப்பை ஆதாரமாய்க் கொண்டு 'மாதா மணிவாசகம்' என்னும் நூலும் வெளியிடப்பட்டிருத்தல் வேண்டும். கடலகடந்த நாடுகளில் வெளியிடப்பெற்ற இத்தகைய நூல்களும் பாடபேத ஆய்வாளருககு அவசியமானவை.

பாரதியின் பாடல்களின் மூலப்படிவத்தைப்பற்றி ஆராய்கையில், இன்னெரு செய்தியும் நமது கவனத்திற்குரியது. அண்மையில் பாரதியார் கவிதைத் தொகுதிகளை வெளியிடுவோர் பலராவர்; பாரதி நூல்களை வெளியிடுவதில் இப்பதிப்பாளர்களிடையே போட்டி எழுந்துள்ளது என்றும் கருதலாம். தத்தம் பதிப்புக்குத் தனிச்சிறப்புத் தேடுவதில் முனைந்து நிற்கும் சில வெளியீட்டாளர்கள், "இதுவரை வெளிவந்துள்ள மற்றவர்வெளியீட்டில் வெளிவராத (பல) புதிய கவிதைகள் இந்த எமது வெளியீட்டில் இடம்பெறுகின்றன என்பதை மகிழ்ச்சியோடு" தெரிவித்துக்கொள்கின்றனர். (அருண பதிப்பகம், பதிப்புரை, 1968.) "எமது பற்பசையே ஏனையவற்றிலும் வெண்மையாக உங்கள் பற்களைத் துலக்கிப் பாதுகாப்பும் அளிக்கிறது" என்று பாவனைப்பொருள் உறபத்தியாளர் சந்தையில் அறிவிப்பதுபோல இருக்கிறது இக்கூற்று.

அருண பதிப்பகத்தினர் இருபத்தெட்டுப் புதிய பாடல்களைக் கண்டுபிடித்துப் பிரசுரித்திருப்பதாக உரிமை பாராட்டுகின்றனர். முயற்சி வரவேற்கத்தக்கதே. காலந்தோறும் 'புதிய' பாடல்கள் வெளிச்சமாதல் இயல்பே. மூலைமுடுக்குகளில் சிறு சஞ்சிகைகளில் முடங்கிக் கிடக்கும் பாரதி பாடல்கள் தொகுதிகளில் இடம்பெறுதல் அத்தியாவசியமே. ஆனல் அதற்கும் நெறி முறைகள் உண்டு. நேர்மையான ஆர்வத்துடன் விஷமத்தனமும் வேடிக்கை பார்க்கும் பண்பும் கலந்து வருவதுண்டு. பழந்தமிழ் இலக்கியங்களைப் பதிப்பிக்

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

"கலைக்கண்"
தனிப்பிரதி 25 சதம்
சுன்னகத்தில் தனலக்குமி புத்தகசாலையிலும்
யாழ்ப்பாணத்தில்
சண்முகநாதன் புத்தகசாலையிலும்
பெற்றுக்கொள்ளலாம்

## அறிந்ததும் அறியாததும்

"மெய்யன்"

**முயற்சிக்கு முயற்சி**

இந்த உலகம் உனக்குச் சிறிதாக வேண்டுமானல், உனது உள்ளத்தைப் பெரிதாக்கிக்கொள்.

**எச்சரிக்கை**

காலத்துக்குக் காலம் அறிஞர்கள் ஏற்றிவைக்கும் அறிவொளிகளை, அறிவீனர்கள் தத்தம் சுயநல வாழ்விற்காக அவற்றை அணைத்துக் கெடுத்துவிடாமல் தடுத்துக்கொள்ளுங்கள். இன்றேல் ஐயோ கேடு!

**சிந்தனைக்கு**

சிந்திப்பது உனக்குரிய சுதந்திரம். உனது சிந்தனை முதலில் நீ வாழ வழிகாட்ட வேண்டும். பின்னர் அது பிறர்க்கு வழிகாட்டட்டும்.

**உண்மையான பேச்சு**

இன்பமும், துன்பமும் இவ்வுலகின் இரு சிறந்த நிலைகளாகும். அந் நிலைகள் என்று தம்முள் கலந்து சிந்திக்கத் தொடங்குமோ, அன்றிலிருந்து மக்களுக்கு அரசாட்சியே அவசியமாக இருக்காது.

**குரங்கிலிருந்து மனிதன்**

"மனம் ஒரு குரங்கு" என்பார்கள். அந்தக் குரங்கிற்கு மனத்திருப்தி ஏற்பட்டால் ஒழிய அது ஒருபோதும் மனிதனக மாறமுடியாது.

**கண்டுகோள்**

மனிதத்துவத்தின் முக்கிய மூன்று உறுப்புக்கள் அன்பு, அறிவு, அடக்கம் ஆகும். அவற்றுள் ஒன்று குறைந்தாலும் மனிதன் பூரணத்துவம் அடையப் போவதேயில்லை.

# அம்பிகையைத் தொழுது அழகிய முருகனை நினை மனமே

**அளவெட்டியூர் கரகக்காவடிக் கலைஞர் திலகம் முத்தையா ஐயாத்துரை அளித்த நேர்முக உரையின் தொகுப்பு.**

த. சண்முகசுந்தரம்
B. A. (Cey.), Dip. in Edu. (Cey.)

மாவிட்டபுரம்கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழா வன்று பிற்பகல் வேளை. சுவாமி தேர்முட்டியிலிருந்து இறங்க ஆயத்தங்கள் நடைபெறுகின்றன. பக்தர்களின் பார்வை காவடியாட்டம் ஒன்றின்மீது திரும்புகின்றது: ஆயிரத்தெட்டு வேல்களைப் பாய்ச்சிய முருகபக்தர் ஒருவர் பரவச நிலையில் மயில் போல ஆடுகின்றார். செடில் கயிறு பிடித்துக்கொண்டு காவடியை ஆட்டுவிக்கின்றவரும் தாளம் பிழையாமல் ஆடுகின்றார். காவடிமேளம் கலகலக்கின்றது.

பக்தர்கள் இருவரின் பேச்சுச் செடிலைப் பிடிப்பவரைப்பற்றி நடக்கின்றது.

"இந்தக் காவடியைப் பழக்கியவர் மகா கெட்டிக்காரன்".

"இந்த ஆள் கத்திமேல் ஆடும்".

"சாவித்திரி சத்தியவான் கூத்திலே கோமாளியாக வந்து சக்கைவாங்கியது இந்த மனிதன்தான். சிவராத்திரிக் கூத்து அது".

"ஏன்? அந்தரக்காவடி, ஏணிக்கரகம் எல்லாம் இந்த மனிதனுக்குத் தண்ணீர் பட்டபாடு".

"ஏன்? தீக்குளிப்பதும் இந்த ஆள்தான்".

இந்த உரையாடலின் நடுநாயகமாக அமைந்துள்ளவர் அளவெட்டியூர் கரகக்காவடிக் கலைஞர்திலகம் முத்தையா ஐயாத்துரை. வீரசைவர் குலத்திற் தோன்றிய இவரின் கலைநிகழ்ச்சிகள் இலங்கையின் ஒன்பது மாகாணங்களிலும் நிகழ்ந்துள்ளன: அந்தக்காலத்தில் உள்ள பெரியார்கள் பலரும் இவரின் கலையைப் புகழ்ந்து பாராட்டியுள்ளனர். இவர் ஒருமுறை கத்திமேல் ஆடினார் ஆட்டம் முடிந்ததும் இறங்கினார். இவரின் அபாரத் திறமையைக் கண்டும் நம்ப மறுத்த ஆங்கிலேயர் ஒருவர் கத்தியின் கூர்மையைப் பரிசோதிக்கத் தன் விரலால் தடவினார். கத்தி அவரின் கையைப் பதம்பார்த்துவிட்டது. கைக்குட்டையை எடுத்துத் துடைத்துக்கெண்டு ஐயாத்துரையின் காலைக் குனிந்து பார்த்தார் அந்த ஆங்கிலேயர். அங்கு மருந்துக்கும் ஒரு காயமும் இல்லை.

இப்பொழுது இக்கலைஞருக்கு வயது 75 ஆகின்றது. தன் ஓய்வுநேரத்தை அம்மன் தியானத்திலேயே இவர் கழித்துவருகின்றார். "கலையின் முடிவு கடவுளையடைதல்" என்பதே இவரின் குறிக்கோள். இவரிடம் சென்று, "உங்கள் வாழ்க்கை வரலாற்றைப்பற்றிய குறிப்புகளைச்சொல்லுகிறீர்களோ?", என்று வினவினேன்.

"வாழ்வின் இறுதிக் கட்டத்தை நோக்கிநிற்கின்ற நான் என்ன சொல்ல இருக்கின்றது சிவம்?" என்றார்.

"உங்களைப்பற்றிப் பிற்காலத்தவர்கள் அறிந்து வைக்கவேண்டும். சொல்லுங்கள்" என்றேன். என்னுடன் வந்த நண்பன் கவிஞர் செ. கதிரேசர்பிள்ளையும் "சொல்லுங்கள் பார்க்கலாம்" என்று உற்சாகமாகக் கூறினார். கலைஞர் திலகம் பேசத் தொடங்கினார்.

"எனது தகப்பனாரின் பெயர் முத்தையா. தாயாரின் பெயர் வள்ளிப்பிள்ளை. நான் பிறந்து வளர்ந்த ஊர் நுணுவில். எனது தந்தையார் இந்திரசால வித்தையில் கைதேர்ந்தவர். இசைக்கருவிகள் பலவற்றையும் நன்கு வாசிக்சக்கூடியவர். தாயாரின் தகப்பனார் வேலுப்பிள்ளை. இவர் மாந்திரிகத்தில் ஈடுபாடுடையவர். பெருமளவிலே கமமும் இவர் செய்துவந்தவர். எனக்கு ஏழு வயதுவரையில் ஏடு தொடக்கப்பட்டது. நுணுவில் சைவ வித்தியாசாலையிலே ஐந்துவரை கற்றேன்: சிறுவயதாக இருக்கும்போது எனக்கு ஏதோ கடும் வருத்தம் ஏற்பட்டதாம். "அம்மன் கோயிலுக்குக் காவடி எடுப்பதாக என் பாட்டியம்மா—தாயாரின் தாய்—நேர்த்திக் கடன் செய்தார். நானும் நோயினின்றும் தப்பிவிட்டேன். ஏழு வயதிலே எனக்கு நல்ல நாள்பார்த்துக் காற்சலங்கை கட்டிக் காவடி பழக்கப்பட்டது. இதற்குக் குருவாக அமைந்தவர் வேலுப்பிள்ளை அண்ணாவியார். ஒருமாதகாலம் முறையாகப் பயின்றேன். ஒருநாள் என் பாட்டியம்மாவைப் பார்த்து "இந்தப் பெடியனை என்ன செய்வது?" என்றார் அண்ணாவியார்.

"ஏன் இவன் குழப்படியோ?" என்றார் பாட்டி. "அப்படி ஒன்றும் இல்லை. நான் சொல்லிக் கொடுப்பதிலும் பார்க்க இவன் மூன்று மடங்கு கற்றுக்கொள்கின்றான். இவனின் இரத்தத்திலே தாளம் கலந்துபோய்விட்டது. எதிர் காலத்தில் பெரும் யோக காரணவான்," என்று வாழ்த்தினார். நுணுவில் குளத்தடி அம்மன் கோயிலுக்கு நான் பொங்கல் தினத்தன்று காவடி எடுத்துச்சென்றேன். எல்லோரும் என் ஆட்டத்தைப் பாராட்டினார்கள். அன்று தொடங்கியது எனது கலைவாழ்க்கை. அதைத் தொடக்கி வைத்தவள் அம்பிகை; அங்கயற்கண்ணி" கலைஞரின் கண் பனிக்கின்றது. உணர்ச்சிப் பெருக்கால் கைகள் நடுங்குகின்றன. தொடர்ந்து பேசுகின்றார் கலைஞர் திலகம்.

"பள்ளிப் படிப்பை ஐந்துடன் முடித்துக்கொண்டு வீட்டில் இருந்து படித்துக் கொண்டிருந்தேன். எனது தகப்பனாரும் கமத்தில் ஈடுபட்டிருந்தார். சில காலம் முல்லைத்தீவிலே போய்க் குடியேறிக் கமஞ் செய்தோம். கமத்தில் ஈடுபட்டாலும் எனது எண்ணம் எல்லாம் கலையைப் பற்றியே இருந்தது. ஆண்டுதோறும் அம்மன் பொங்கலுக்கு நான் எடுக்கின்ற காவடியை எல்லோருமே பாராட்டினர். முல்லைத்தீவை விட்டு மீண்டும் நுணுவிலுக்குவந்தேன். அப்பொழுது சாவகச்சேரியில் புத்துவாட்டி சுப்பையாவின் நாடகக் குழுவினர் வந்தனர். அங்கு சில காலம் தங்கி நாடகங்களை நடத்தினர். எனக்கு அந்த நாடகங்களில் பெரும்ஈடுபாடு ஏற்பட்டது: பகல் நேரங்களில் நடிகர்களுடன் சேர்ந்து பழகுவேன்: அவர்களுக்கு ஏதாவது உதவி ஒத்தாசை செய்வேன். இரவிலே பார்த்த நாடகப் பாத்திரங்களைப்போல, அதே நடிகர்கள்முன் பேசிக் காட்டுவேன், பாடிக் காட்டுவேன், நடித்துக் காட்டுவேன். இந்தியாவிலிருந்து வந்த கோமாளி நடிகர் சேதுராமையா என்பவர் என்மீது பெரும் அன்பு கொண்டிருந்தார். அவரின் ஆசியைப் பெற்றேன். அவரின் கட்டளைப்படி சிறு பாத்திரங்களாகத் தோன்றி அந்த நாடகக் குழுவில் நன்கு நடித்தேன். நாடகம் பார்க்க வந்திருந்தவர்கள் உள்ளூர்ப் பையனான என்னை நன்கு பாராட்டினர். என் கலை அறிவு பெரும்பாலும் கேள்வி ஞானம்தான். ஒருவரிடமும் கட்டுப்பட்டிருந்து நான் படிக்கவில்லை. அம்பிகையின் விருப்பம் அதுபோலும். என் தகப்பனார் என் கலை வாழ்விற்கு ஊன்று கோல்போல இருந்தார். தாயாரின் அன்பும் ஆதரவும் இம்மட்டு என்று கூற முடியாது.

"எமது ஊரில் உள்ள வயிரவர், அம்மன் கோயிலுக்குச் செல்லும்போது சில வேளைகளில் கலைவந்து ஆடுவேன். சூலத்தைக் கையில் வைத்து ஆடுவேன். சிறுவனாக இருக்கும்போது எனது மாமனார் சண்முகம் இந்தக் கோயிலுக்கு வந்து கரகம் ஆடினார். அவர் ஆடிய பின்னர் இறக்கிவைத்த கரகத்தை எடுத்துத் தலையில்வைத்து நான் ஆடினேன். உடுக்குப் பாட்டுக் கலைஞர்களும் என்னை ஊக்குவிக்கும் பொருட்டு அம்மன் காவியத்தைப் பாடினர். அம்பிகையின் அருளால் நன்கு ஆடினேன். அதுவே எனது முதற் பயிற்சியும் — ஏன்? — அரங்கேற்றமும் எனலாம்.

"இருபது வயதாக இருக்கும்போது கரைப்பாதையாகக் கதிர்காமஞ் சென்றேன். முருகனை வணங்கிய பின்னர் ஒருநாள் பௌத்த பிக்கு ஒருவரைச் சந்தித்தேன். அவர் நன்கு தமிழ் பேசுவார். ஒரு ஆண்டு காலம் அந்தப் பிக்குவின் பர்ணசாலையில் வாழ்ந்தேன். அவரின் அறிவுரைகளைக் கேட்டேன்: முருகன் தியானத்தில் ஈடுபட்டேன். வீட்டைப் பற்றியே சிந்திக்கவில்லை. இது இப்படியிருக்கப் கதிர்காமத்திற்கு இசிலாமிய குரு ஒருவர் வந்திருந்தார். அவரின் உரைகள் என்னைக் கவர்ந்தன. அவருடன் கொழும்பிற்கு வந்தேன். வரும்பொழுது வீட்டு எண்ணம் வந்தது. "இந்தக் கட்டை இந்தியா யாத்திரை போகின்றது" என எழுதிவிட்டு, முசிலிம் குருவுடன் நாகூர் ஆண்டவர் சந்நிதிக்குப் போனேன். பின்னர் பழனி, சிதம்பரம், வேதாரணியம், மதுரை என்ற தலயாத்திரை செய்தேன். மடியில் ஒருசதம் கிடையாது. எல்லாம் அம்பிகையின் அருள். மதுரையில் சிலகாலம் தங்கி அம்பிகையை வழிபட்டேன். அங்கிருந்து மலையாளம் போனேன். கொச்சியிலுள்ள வீரகத்தி என்பவர் சிறந்த கலைஞர். கம்பத்திலிருந்து "திரௌபதை அம்மன்" கதை செய்வார். அவருடன் நான் சிலகாலம் தங்கியிருந்தேன். அப்பொழுது அங்கு யாழ்ப்பாண வியாபாரிகள் பலர் கொச்சியில் இருந்தனர். என் கலையைக் கண்டு அவர்கள் என்மீது அன்புபாராட்டினர். வீரகத்தி என்பவருக்குப் போட்டியாக "அம்மன் தவசு" கம்பக் கதையை நிகழ்த்தினேன். அவருக்கு என்மீதுசற்றுப்பொருமையும் ஏற்பட்டது. இப்படியாக நான் இருக்கும்போது என் அன்பர்கள் எனக்குப் பாராட்டுவிழா ஒன்றை நடத்திப் பொற்கிழி ஒன்றையும் தந்தனர். அவர்களில் ஒருவர் என்னைப் பார்த்து, நீ யாழ்ப்பாணம் போ. வீட்டுக் கவலை இல்லையோ?", என்றார். யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தேன். என்னைக் கண்டதும் வீட்டாரின் மகிழ்ச்சிக்கோ அளவில்லை. கலியாணப் பேச்சுத் தொடங்கியது. கலைஞர் சினியரின் மகளை எனக்கு உரிய முறைப்படி திருமணஞ்செய்து வைத்தனர். உடுக்குப் பாட்டுக் கலைஞர் சி. சிதம்பரப்பிள்ளையின் சகோதரி இவர் என்பதைச் சொல்ல ஆசைப் படுகின்றேன். யாழ்ப்பாணத்தில் கரக ஆட்டத்தைத் தொடங்கினேன். உடுக்குப் பாட்டை மைத்துனர் சிதம்பரப்பிள்ளை நிகழ்த்துவார். என் கனவிலும, நினைவிலும் கலையே இடம் பெற்றது. ஒன்று சொல்ல மறந்துவிட்டேன். மறவன்புலவிலே சமாதியான ஏரம்புச் சாமியாருக்குப் பணிவிடைகளை நான் சிறுவனாக இருக்கும்போது செய்வேன். ஒருநாள் அவர் நிட்டையில் இருந்து கலையும் போது "நீ பெருங் கலைஞன் ஆவாய்" என்று அருள்வாக்குத் தந்தார். அந்தப் பெருமானின் ஆசீர்வாதம் எனக்குத் துணையாக அமைந்தது.

"அளவெட்டி அம்மன் கோயிலில் வழிபாடு செய்வேன். இங்குதான் என் கலை வாழ்வு வளர்ச்சியடைந்தது. ஆண்டுதோறும் மாவை முருகன் தேர்த்திருவிழாவுக்குக் காவடிகளைப் பழக்கிவந்துள்ளேன். இந்தப் பணி தொடர்ச்சியாகச் சுமார் நாற்பது ஆண்டுகள்வரை நிகழ்ந்தது. அம்பிகையைத் தொழுது அழகிய முருகன் கோயிலுக்குக் காவடியுடன் போவேன். இந்தத் தொண்டே என்னை வாழ வைத்தது. என் வாழ்வைப் பொலியவைத்தது. இதைச் சொல்லுவதில் நான் பூரிப்படைகின்றேன்.

"ஒருநாள் அம்பிகை என் கனவிலே தோன்றி, "கத்திமீது ஆடு", என்று கட்டளையிட்டார். "நான் ஆடமாட்டேன். கத்தி வெட்டும்", என்றேன. முருகனுடன் தோன்றிய அம்பிகை, "நான் இருக்கின்றேன். ஒன்றும் நடவாது. ஆடு", என்றார்.

"வாசிவழக்கம் அறிய வேண்டும்
மறுமந்திர வீடுகட்ட வேண்டும்
நாசிமுனைக் குள்ளே யோகம்..."

என்ற சித்தர் பாடலை அம்மன் ஒலித்ததுபோல இருந்தது. அளவெட்டி அம்மன் கோயில் வீதியில அதிகாலையிலே எவருக்கும தெரியாமல் கத்தியை நட்டு ஆடப் பழகிவேன் பொங்கலன்று. இந்த ஆட்டத்தை அம்பாள் சந்நிதியில் பக்தர்கள் முன் ஆடிக்காட்டினேன்.

"என் இல்லற வாழ்க்கை இனிது நடக்கின்றது. எனக்கு இரண்டு ஆண்குழந்தைகளும் நான்கு பெண்குழந்தைகளும் இருக்கின்றனர். எனது மகள் புஷ்பராணி பரதக்கலையை நன்கு பயின்றவர். வெள்ளிக் கிண்ணப் பரிசுகள் பலவற்றைப் பெற்றவர். இக்குழந்தையின் அகால மரணம் எனது பேரிழப்பு. இளைய மகன் சிவபாதம் இன்று மிருதங்க வித்துவானாக இருக்கின்றார். மூத்தமகன் குலசேகரம் என்னைப்போலக் கலை வாழ்வில் ஈடுபட்டபின்னர் ஓய்வுபெற்றிருக்கின்றார். மருமகன் விநாயகலிங்கமும் சிறந்த கலைஞர்.

"உங்கள் வாழ்க்கையில் நீங்கள் மறக்கமுடியாத நிகழ்ச்சி எது?" என வினவினேன்.

"இரண்டைக் குறிப்பிட விரும்புகிறேன் தம்பி. இடிக்கோயாவில நிகழ்ந்த கரகவிழா ஒன்றிலே இந்தியக் கலைஞர்களும் அடியேனும் கலந்துகொண்டோம். எனக்குத் தங்கப்பதக்கமும், கரக திலகம் என்ற பட்டமும், எல்லாவற்றிற்கும் மேலாக இந்தியக் கலைஞர்களின் பாராட்டும் அன்பும் கிடைத்தன: மற்றது யாழ்ப்பாணம் பரமேசுவரக் கல்லூரியில் நடந்த தமிழ்வளர்ச்சிக்கழக விழா. இந்த விழாவிலே காலஞ்சென்ற தந்திதபால் அமைச்சரும், இராமநாதன் துரையின் மருகருமான கௌரவ சு. நடேசபிள்ளையின் ஏற்பாட்டின்படி எமது நிகழ்ச்சி நடந்தது. இந்தியாவிலிருந்து வந்த அறிஞர்கள்—பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை உட்பட எம்மை ஒருமுகமாகப் பாராட்டினர். இதனை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன்.

"தம்பி ஒன்று சொல்ல மறந்துவிட்டேன். நான் நாடிநாடித் தொழுதேன்—தொழுகின்றேன் அம்பிகையையும அவரின் திருக்குமரன் முருகனையும். என்னை ஆட வைத்தவர்களும, பாட வைத்தவர்களும் இவர்களே. 'மாவைக்கந்தன் காதல்', 'அம்மன் தாலாட்டு', 'கந்தன் காவியம்', 'ஐயனார் காவியம்', 'கும்பிளாவளைப் பிள்ளையார் பிரார்த்தனை' போன்ற நூல்களை யாத்து இந்தக் கட்டை வெளியிட்டது. நான் பண்டிதன் அல்லன; புலவன் அல்லன; அறிஞன் அல்லன. ஆனல் அம்பிகையின் அடிமை. முருகனின் தாசன் சிவம்" என்றார்.

"எதிர்காலச் சந்ததியினருக்குக் குறிப்பாக ஏதாவது சொல்ல விரும்புகின்றீர்களோ?" என்றேன்.

"பலவற்றைச் சொல்லலாம். முக்கியமானது ஒன்று. கடவுளை அடைதல் கலைகளின் நோக்கம். இதனையே அழுத்திக் கூற விரும்புகின்றேன். தெய்வ நம்பிக்கையின்றிக் கரகம் ஆடினல் அது இரகமாக மாறிவிடும்" என்று தன் பேச்சை முடிக்கின்றார். நாமும விடைபெறுகின்றோம்.

---

## ஊக்குவிப்போம்

ஒவ்வொரு மாதமும் 23ஆந்திகதி கலைக்கண் வெளியாகும். கழகமன்றச் செய்திகளை முதல்மாதத்தின் 23ஆந் திகதி தொடக்கம் மறு மாதம் 5ஆந் திகதிக்குப் பிந்தாமல் அனுப்பி வைக்கவும்.

ஆசிரியர் : "கலைக்கண்"
28, டேவிட் வீதி,
யாழ்ப்பாணம்

# ஞானப்பிரகாசரும் தமிழாராய்ச்சியும்

**சுவாமி ஞானப்பிரகாசரின் 98ஆவது ஆண்டு நினைவு கூர்தல் விழாவையொட்டித் திருநெல்வேலி ஞானப்பிரகாசர் ஆச்சிரமத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் – யாழ். ஆயர் அதி. வண. தியோகுப்பிள்ளை ஆண்டகையின் தலைமையில் ஆற்றிய உரையின் சுருக்கம்.**

வளர்ந்து வரும் மேலைப் புல ஆய்வுக்கோட்பாடுகளின் பின்னணியில் தமிழாராய்ச்சி முதிர்ச்சி பெற்றுவரும் கால கட்டத்திலே இந்நெறிக்கு ஆரம்ப கர்த்தாக்களாக விளங்கிய பலரையும் நினைவு கொள்ளுதல் அவசியமாகும். பின்னோக்கிப் பார்க்கும் போது ஒவ்வொருவருடைய பணிகளிலும் முதிர்ச்சியும்—ஆங்காங்கே கருத்துலக வேறுபாடுகள் மலிந்திருப்பதையும் அவதானிக்கலாம். கருத்துலக வேறுபாடும் முதிரா நோக்குகளும்—ஒரு புறம் போக—அவரவர் ஆற்றிய பாரிய பணிகள் தமிழாராய்ச்சியின் வளர்ச்சியை நெறிப்படுத்தவல்லன என்பதை உணராமலிருக்க முடியாது. பல்கலைக் கழகங்களும், நெறிமுறையான ஆராய்ச்சிகளும் செவ்வனே வளரமுன்னர் தனிப்பட்ட ஆராய்ச்சியாளர்களின் பணிகள் ஒருங்கிணைத்து நோக்கப் படவேண்டும். நிறுவன ரீதியாகவன்றித் தாமே நிறுவனங்களாகி ஓய்வும், ஈய்வும் ஏற்படும் தோறும் தமிழாய்ந்து வந்துள்ளனர்.

ஈழநாட்டிலே இந்த நூற்றுண்டின் முதல் அரைப் பாகத்திலே தமது சமயப் பணிக்குப் புறம்பாக இடையருது தமிழாய்வு செய்து தமிழியற்றுறையில் நினைவுகூர வேண்டிய பெருமகளுக விளங்குபவர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர். பல்துறை ஆர்வம் கொண்ட சுவாமிகள் பன்மொழிப் புலவராகவும், மொழியாராய்ச்சிக்கு நிபுணராகவும், வரலாற்றறிஞராகவும், போற்றற்குரிய பதிப்பாசிரியராகவும்; பன்னூலாசிரியராகவும்; புகழ் வாய்ந்த பத்திரிகை ஆசிரியராகவும், பேச்சாளராகவும் விளங்கினர். ஒவ்வொருதுறையிலும துறைபோகியவராகவே தமிழ் கூறும் நல்லுலகம் சுவாமிகளை மனங் கொள்கின்றது.

1875ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 30ஆம் நாள் மானிப்பாயில் சைவ மரபிலே தோன்றிய சுவாமிகள் 1895ஆம் ஆண்டில் குருத்துவ மாணவராகி 1901இல் குருப்பட்டம் பெற்றுர். அன்று முதல் ஓயாது இறுதி மூச்சுவரை சமயவளர்ச்சிக்கும், மொழி வளர்ச்சிக்கும் தொண்டு செய்தார். சமய வளர்ச்சியில் எவ்வளவு ஆத்மார்த்தமாக ஈடுபட்டாரோ அவ்வளவு உள்ளுணர்வுத் தூண்டலுடன் தமிழ்மொழி ஆய்விலும் ஈடுபட்டார். சமயப் பணியையும், மொழி வளர்ச்சிலையயும் தமது இரு கண்ணெனக் கொண்டு சைவப்பணியில் நல்லைநகர் ஆறுமுகநாவலர் 19ஆம் நூற்றுண்டில் எத்துணை அத்யந்த ஈடுபாட்டுடன் செயலாற்றினரோ அதே வேகம் கத்தோலிக்க மதத்தைப் பொறுத்தவரையிலும் தமிழ்மொழியைப் பொறுத்த வரையிலும் சுவாமி ஞானப்பிரகாசரிடம் இருந்தது எனலாம்.

சுவாமிகளின் தமிழாராய்ச்சியை இருமுனைப்பட்ட நிலையில் ஆய்வது பொருத்தமானது. ஒன்று தமிழர் நாகரிகத்தைப்பற்றியது. மற்றையது மொழித்தோற்றம் பற்றிய ஒப்பியலாய்வு. தமிழர் வரலாற்றிலும், யாழ்ப்பாணத்து வரலாற்றிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டு உழைத்தவர் சுவாமிகள். யாழ்ப்பாணத்து அரசியல், சமய சரிதைகளை இயன்ற வரையில் அறிவியல் சார்ந்த நெறியில் எழுதினர். 'தமிழரின் ஆதிச்சமயமும்-சரித்திரமும் யாழ்ப்பாணச் சரித்திர ஆராய்ச்சி போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் காலச் சரிதை ஆதிய தமிழ் நூல்களும், "யாழ்ப்பாணத்து அரசர்; பண்டைய இந்திய சரிதையும் ஆண்டு வரிசையும்" ஆகிய ஆங்கில நூல்களும் சுவாமிகளை இனங்கண்டு கொண்டு கொள்ளப் போதுமானவையாகும். இதற்குப் புறம்பாக சமய வரலாறுகளையும் இலங்கைப் பின்னணியையும் இணைத்து எழுதிய நூல்களும் குறிப்பிடற்பாலன.

சுவாமிகளை அகில உலகும் அறியும் வாய்ப்பை ஏற்படுத்தியது அவருடைய ஒப்பியலாராய்ச்சியே எனலாம். அரிதின் முயன்று வெளியிட்ட சொற்பிறப்பு—ஒப்பியல் அகராதி என்ற நூலும் அவர்கள் வெளிநாட்டு ஆராய்ச்சிச் சஞ்சிகைகளில் ஒப்பியல் கட்டுரைகளும் மொழி ஆராய்ச்சி உலகிலே சுவாமிகளுக்கு அழியாத இடத்தை ஏற்படுத்தியுள்ளன. 19ஆம் நூற்றுண்டில் மொழியாய்வில் ஈடுபட்ட ஐரோப்பிய அறிஞர்களின் வழிநின்று சுவாமிகள் ஆராய்ச்சி செய்துள்ளார்கள். மாக்ஸ்முல்லர் முதலானோர் பண்டை மொழிகளைக் கற்று அவற்றைப் பாகுபடுத்தி வகுக்கமுயன்றனர். இதன் பயனுகப் பின்னைய அறிஞர் உலக மொழிகளை நான்கு குடும்பங்களாக வகுத்தனர்; திராவிடமொழிக் குடும்பத்தின் சிறப்பியல்புகளைக் கால்டுவெல் போன்ருேர் வகுத்துக் கூறினர். மொழிக் குடும்ப வகுப்புக்களைப்பற்றி ஐரோப்பிய அறிஞர்களும் தமிழ் அறிஞர்களும் ஆய்வு செய்ய முனைந்தனர். இம் முயற்சிகளின் வழி முதன் முனைப்பாகச் சுவாமிகளின் பணி சிறந்து வளங்குகின்றது. செந்தமிழ், சத்தியநேசன், லோகோபகாரி, சத்தியவேத பாதுகாவலன் முதலிய பத்திரிகைகளிற் சுவாமிகள் எழுதிய கட்டுரைகள் யாவும் தொகுத்து வெளியிடப்பட வேண்டும். அப்பொழுதே சுவாமிகளை முழுமையாக மதிப்பிடமுடியும்.

தமிழையும், வடமொழியையும், ஆங்கிலத்தையும் ஆரம்பத்தில் ஆழ்ந்து கற்றிருந்த சுவாமிகள்—தாம் அரசாங்க சேவையில் இருந்த காலத்தில் அறிந்த சிங்கள மொழியின் பின்னணியில் பாளி மொழியையும், அதன் இனத் தொடர்பான திபேத்திய, பர்மிய—கூர்க்க மொழியையும் அறிந்து கொண்டார். தாம் குருத்துவப் படிப்புப் பின்னணியில் இலத்தீன் மொழியையும் அதன் வழியாக ஐரோப்பிய மொழிகளைக் கற்றுக் கொண்டார். லத்தீன்—கிரேக்கம் முதலிய மொழிகள் வழியாகப் போர்த்துக்கேயர், ஒல்லாந்த, ஜேர்மனிய மொழிகளையும் அதன் வழியாக அவ்வவ் இனத் தொடர்பு மொழிகளை அறிந்து கொண்டார். சுவாமிகளின் பன்மொழி அறியும் வேகம் அதிகரித்தது. சுவாமிகளின் பன்மொழி அறிவும், வேகமும் அதிகரித்தது. பெருமைவாய்ந்த பினிஷிய, பாபிலோனிய, சுமோரிய, அசீரிய, எகிப்திய பாஷைகளையும் அறிந்து கொண்டார். சுவாமிகள் தமது இறுதிக் காலத்தில் ஏறக்குறைய எழுபது மொழிகளைப் பற்றி ஆழமாக அறிந்திருந்தார்.

பல்வேறு மொழிகளையும் அறிந்த சுவாமிகளின் ஒப்பியலுணர்வு கடைசிக் காலத்தில் ஒரு வெறியாகவே அமைந்து விட்டது எனலாம்.

"சுவாமிகள் தமது கடைசிக் காலத்தில்மஞ்சட் பாஷைகளை அறிவதில் கவனம செலுத்தி வந்தார். சீன, மங்கோலிய, பர்சிக பாஷைகளில் உள்ள அரிவரிப் புத்தகங்களை எடுப்பித்து எழுத்துக்களைப் பார்த்து எழுதி உச்சரித்து வாசித்து விளங்கி அறிந்து கொண்டிருந்தார். தமக்குத் தருணம் கிடைக்கும்போதெல்லாம் பல பாஷைகளுக்குமுரிய புத்தகங்களை விரித்துவைத்து ஒவ்வொரு பாஷைக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளையறிந்து ஒப்பிட்டுத் தொடர்பு காணுவார். அத்தொடர்புகளைத் தமது குறிப்புப் புத்தகத்தில் குறித்துக் கொள்ளுவார். கண்ட முடிவுகளை அறிவாளிகளுக்கும், ஆசிரியர்களுக்கும் சொல்லிக் காட்டி மகிழுவார்.

[6–2–1948]

**ஆ. சிவநேசச்செல்வன்**
**பி. ஏ., [ஆனர்ஸ்]**
*தமிழ் விரிவுரையாளர்,*
*யாழ்ப்பாணக்கல்லூரி.*

சுவாமிகளின் இறுதிக் கால ஆர்வத்தைச் சத்திய வேத பாதுகாவலனில் வெளியான மேற்போந்த குறிப்புத் தெளிவாகக் காட்டுவதாகும்.

சுவாமிகளுடைய காலத்திலே மொழியாராய்ச்சிக்கு மிகுந்த மதிப்பு இருந்தது. அவருக்குத் தமிழ் இலக்கியத்திலும், பிறமொழி இலக்கியங்களிலும் ஆழ்ந்த ஈடுபாடு இருப்பினும் மொழியாராய்ச்சியில் ஈடுபட்டார். சுவாமிகள் தமது ஆராய்ச்சி முக்கியத்துவத்தையும் பணிமுதன்மையையும் கொண்டிருந்த கருத்தைத் தாமே செந்தமிழ் 24ஆம் தொகுதி (பக். 193) யில் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

"மொழி நூல் வேறு; இலக்கண நூல் வேறு; முன்னையது தனிச் சொற்களின் இயல்பையும் அவை தம்முன் அடையும் மாற்றங்களையும் கூறும். பின்னையது சொற்கள் ஒன்றேடொன்று கூடும்போது முன்னிலை இறுதிகளிற் கொள்ளும் விகாரங்களை எடுத்தோதும். தமிழில் தொல்காப்பியம் முதலாகப் பல இலக்கண நூல்கள் எழுந்துள்ளன. மொழி நூல்களோ சமீப காலத்தில் மட்டும் வெளிப்படத் தொடங்கியனவாம். மாகறல் கார்த்திகேய முதலியார் இயற்றிய மொழி நூல் இந்த நிரையில் முதன் முதல் செய்த பிரயதனங் மாக மேலும் பல திருத்தங்களுக்கு இடனுகக் கிடக்கின்றது. எனது தமிழ் அமைப்புற்ற வரலாறு. என்ற நூலும் சொற்பிறப்பு ஆராய்ச்சி என்ற நூலும் யதார்த்தமான மொழிகளுக்கு அத்திவாரங்களை இட்டன எனச் சொல்லலாம்."

சுவாமிகள் தமது ஒப்பியல் அகராதியை ஒவ்வொன்றும் 100 பக்கங்கள் அடங்கிய 20 பாகங்களாக வெளியிடத் திட்டமிட்டிருந்தார். முதல் ஆறுபாகம் மட்டுமே சுவாமிகளால் வெளியிடப்பட்டது. இப்பணியினை வண. பிதா. தாவீது அடிகள் தொடர்ந்துள்ளார்கள்.

சுவாமி ஞானப்பிரகாசரின் மொழியியல் கொள்கைகளிற் சிலவற்றை மேல் நாட்டுத் தமிழ் ஆராய்ச்சியாளருட் சிலர் சுவாமிகள் காலத்திலேயே ஏற்க மறுத்தனர். சுவாமிகள் தமது கருத்தில் தாம் கொண்ட நம்பிக்கையை விளக்கும் பான்மையில் எழுதியுள்ள முகவுரையை ஈண்டு தருவது பொருத்தமானது.

"இன்று வரையும் யான் நாட்டும் கொள்கை அறிஞர்களாய்ப் பெரிதும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதை ஏனையோரினும் பார்க்கத் தெளிவாக யான் அறிந்துள்ளேன். திராவிடச் சொற்களின் பகுதிகள் குற்றமற்ற அடிப்படையில் ஆராயப்பட்டால் அவ்வாராய்ச்சி இந்து ஐரோப்பிய மொழியியலை நன்கு விளக்கும் என்பது எமது நம்பிக்கை. ஆனதினுல் இவ்விரு மொழிக் குடும்பங்களின் பகுதிகள் நடுவண் தோன்றும் ஒருமைப்பாடு அமைந்திருத்தலைக் காட்டுதலின் யான் சற்றேனும் தயங்கவில்லை. பெரும்பாலும் இவ்விரு மொழிச் சொற்களின் ஒப்புமை காட்டுதலே எனது நோக்கமாயிற்று. ஆனுல் சில சமயங்களில் சுருங்கக்கருதியே ஒப்புமைக்குப் பதிலாக ஒப்புமைக் குறியைக் கொடாது சொற்களின் உற்பத்திக் குறிகளைக் கொடுத்திருக்கிறேன், மன்னிக்கவும். யான் காட்டும் ஒப்புக்கள் அன்றேல் உற்பத்திப் பகுதிகள் யாவும் அங்கீகரிக்கப்படுமென யான் எதிர் பார்க்கவில்லை. பிழைகள் எடுத்துக் காட்டப்படின் யான் அவற்றை ஏற்கத் தயங்கமாடடேன்.

[தாவீது அடிகளின் மொழி பெயர்ப்பு]

உண்மையை எதிர் நோக்கும் சுவாமிகளின் ஆராய்ச்சி மனோநிலையைத் தெளிய வைக்க மேற்போந்த பகுதிகள் போதுமானவை. சுவாமிகளின் கருத்தை மறுத்துரைத்த ஜேர்மனியர்வில்லி கெய்சர் சிங்களப் பேரகராதிப் பதிப்பாசிரியர் யூலியஸ்தோலனேரெல் ஆகியோருக்கு மறுப்புரைகள் பகர்ந்துள்ளார். சுவாமிகள் ஆராய்ச்சி ஆர்வத்துக்கு ஆக்கமும், ஊக்கமும மேலைப்புல அறிஞர்கள் பலர் அளிந்து வந்ததையும் அறிகிருேம். கீல் சர்வகலாசாலையைச் சார்ந்த F. O. ஷுறேடர் பேர்ளின்–தி றெப்பரே சர்வகலாசாலையைச் சேர்ந்த கலாநிதி H. பெயித்தான் • அவ்வப்போது சுவாமிகளுக்கு உற்சாக மூட்டி வந்துள்ளார். சுவாமிகள் ஜேர்மனிக்கு விஜயம் செய்த காலத்தில அந்நாட்டு மக்கள் அவரது அறிவுக்கு அளித்த மதிப்பு மனங்கொள்ளப்பட வேண்டியது; சிறந்த மேதையாகிய சுவாமிகளின் வருகையை நினைவூட்டுவதற்காக ஜேர்மன் அரசாங்கம் சுவாமிகளின் படம் பொறிக்கப்பட்ட விசேட முத்திரையை வெளியிட்டது.

சுவாமிகளைப் பன்முறை வெளிநாட்டுக் கழகங்கள் பல் ஆராய்ச்சிச் சொற்பொழிவுகளுக்கு அழைத்தும் தமது ஆத்மீகப் பணியின் தேவை நோக்கி, வெளிநாடு செல்ல ஒருப்படவில்லை. வெளிநாடு சென்றிருப்பாராயின் சுவாமிகளின் விரிந்த அறிவு துலங்கும் வாய்ப்பும் சர்வதேசப் புகழும் கிடைத்திருக்கும். இதுபற்றிச் சுவாமிகள் ஒப்பியலகராதி முகவுரையில் கூறுவது அவதானிக்கத் தக்கது;

"அன்பினுல் தூண்டப்பட்டு இடையூறுகள், துன்பங்கள் நிறைந்த குருத்துவத் தொண்டுடன் கல்வி விருத்திக்காகவே அயராது உழைத்தேன்."

எனக் கூறியுள்ள வாசகங்கள் மீண்டும் ஆறுமுகநாவலர் பணியுடன் ஒப்பிட வாய்ப்பளிக்கின்றன. ஆறுமுக நாவலரும் இதுபோலவே சமயத்தையும், கலவியையும் இரு கண்ணெனக் கொண்டு பணியாற்றினுர். அதி வணக்கத்துக்குரிய எட்மன்ட் பீரிஸ் கூறியுள்ளதுபோல்,

"சுவாமி ஞானப்பிரகாசர் ஓர் பாஷா நிபுணர், சரித்திர ஆசிரியர், இலக்கிய விற்பனர் என்பதெல்லாம் உண்மையிலும் உண்மை; ஆனுல் இவையெல்லாம் இவருடைய சீவியத்தில் முக்கிய தொண்டல்ல. அர்ச். பிரான்சிஸ் சவேரியர் போலும்ஜோசொப்வாசஸ் சுவாமியார் போலும் கொன்செல்லாஸ் சுவாமி போலும் ஆன்ம ஈடேற்றத் தொண்டாற்றும் ஓர் குருபிரசாதி" எனக் கூறலாம்.

[சத்தியவேத பாதுகாவலன்]

தமிழியல் ஆராய்ச்சியிற் சுவாமி ஞானப்பிரகாசர் கொண்ட ஈடுபாடு சுவாமி ஹெரஸ் அவர்களின் தொடர்பை ஏற்படுத்தியது. சுவாமி ஹெரஸ் யாழ்ப்பாணத்திற்கு வருகை செய்த போது ஞானப்பிரகாசரிடம் பல சந்தேகங்களைக் கேட்டறிந்தார். சுவாவாமிகளின் மொழியாராய்ச்சித் திறனையும், புலமையையும் பாராட்டியுள்ளார். சுவாமிகள் தமது நூல்களிலும், கட்டுரைகளிலும் தூயதமிழ் நடையையே கையாண்டுள்ளார். மதப் பிரசாரத்திற்காகத் தமிழைக் கற்கமுயன்ற சுவாமிகள் தமிழின் தூய்மையைப்பேணுவதில் கொண்ட ஆர்வமும் பரந்த நோக்கும் தருக்க சாத்திர முகவுரையின் மூலம் தெரிகிறது.

"தனித்தமிழே அன்றி வடமொழிச் சொற்கலப்புள்ள தமிழ் தக்கதன்றென விலக்குகின்ற நவீன நூலாசிரியர் சில்லோரது அபிமதத்தை இந்நூலுள் மேற்கொண்டிலோம். ஆரியர் தமிழ்நாட்டினுள் நுழைந்த பின்னர் தமிழில் எழுந்தன

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

# காலத்தால் முந்திய நல்லூர்ச் சிலைகள்

இந்திய இலங்கைக் கலைஞர்கள் கலைகளை முருகியல் அல்லது அழகியல் நோக்குடன் மட்டுமன்றி ஆத்மிக நோக்குடனும் நோக்கினர்; செயலாற்றினர். எனவே, கலைகள் இரு நோக்குப் பெற்றன. கலைஞர் தத்தம் சமயங்கள் அல்லது ஆதரவாளரின் சமயங்களுக்கேற்ப சைவ, வைஷ்ணவ, சமண, பௌத்தக் கலைகளை வளர்த்தனர்; முருகியல் இன்பத்தையும், ஆத்மிக ஞானத்தையும் ஒருங்கே காட்டிக் காண்போரை மகிழ்வித்தனர்; கலைகளிலீடுபடச் செய்தனர்; சமயப்பற்றுடையராக்கினர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே விளங்கிய பழைய சைவ, வைஷ்ணவக் கோவில்கள், அவைகளிலே வணங்கப்பட்ட தெய்வச் சிலைகள் அந்நியராதிக்கத்தினாலே பெருமளவு அழிந்துபோய் விட்டன. யாழ்ப்பாண அரசின் தலைநகரான நல்லூரிலே திகழ்ந்த புகழ்மிக்க பழைய கந்தசுவாமி கோவிலைச் சேர்ந்தவை எனக் கருதப்படும் வள்ளியம்மன், தெய்வயானையம்மன் விக்கிரகங்கள் சில காலத்திற்கு முன் நல்லூரிலுள்ள பூதராயர் வளவிலே மண்வெட்டியபோது வந்தனவாகவும், அவை இப்போதைய கந்தன் ஆலயத்தின் மூலஸ்தானத்திலேயுள்ள வேலின் இருமருங்கும் இருக்கின்றன எனவும் கூறப்படுகிறது.[1] அவை வெளியே கொண்டுவரப்படாத படியால் அவற்றின் கலை நுணுக்கங்களைப் பலர் அறியமுடியாதுள்ளது. மேலும் நல்லூரின் வடபாலுள்ள பூதராயர் கோவிலர்ச்சகர் திரு. இராமலிங்க தேசிகரின் தாயார் திருமதி. பசுபதிக் குருக்கள் சின்னம்மா என்ற அம்மையாரின் கூற்றுப்படி அக்கோவிலுக்குப் பக்கத்திலுள்ள பூதராயர் குளத்தில் இற்றைக்குச் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன் மண்வெட்டியபோது சிலை(கள்) வந்ததாகவும் அவற்றைத் திரு. இராமலிங்க உபாத்தியாயர் எடுத்துப் பிரமஸ்ரீ குமாரசுவாமிக் குருக்களிடம் கொடுத்ததாகவும அறியப்படுகின்றது.[2] ஒருவேளை மேற்குறிப்பிட்ட சிலைகளைப்பற்றிய செய்தியாகவுமிது இருக்கலாம். யாழ்ப்பாணத்தினைப் போர்த்துக்கேயர் வென்று நல்லூர்க் கந்தன் ஆலயத்தினை அழிக்கச் சென்றபோது அங்கிருந்த விக்கிரகங்களை அர்ச்சகர் குளங்களிலும, கிணறுகளிலும் எறிந்துவிட்டுச் சென்றதாக யாழ்ப்பாண வைபவ மாலை கூறும்.[3] இக்கூற்றினை மேற்குறிப்பிட்ட சிலைகளின் மீட்புப்பற்றிய செய்திகளும், திருக்கேதீஸ்வரம், திருக்கோணமலை முதலிய இடங்களிலே கிடைத்துள்ள சிலைகளும் பிறவும் உறுதிப்படுத்துகின்றன. ஆபத்துக் காலங்களிலே மக்கள் தமது உடமைகளையும், பிற பொருட்களையும் நிலத்திலோ, நீரிலோ மறைத்துவிட்டுச் சென்றமையினைப் பல நாட்டு வரலாற்றிலே காணுகிறோம்.

மேலும், நல்லூரிலுள்ள பழைய சட்டநாதர் கோவிலைச் சேர்ந்ததாகக் கருதப்படும் எட்டுச் சிலைகள் தற்போதைய சட்டநாதர் கோவிலின் திருக்குளத்தினை வெட்டியபோது வெளிவந்ததாகக் கூறப்படுகின்றது.[4] அவற்றுள் உமாதேவியின் வடிவம் இன்றும் இக்கோவிலில் உள்ளதாம்.[5] ஏனையவை யாழ்ப்பாணம் பழம்பொருட் காட்சிச் சாலையிலே காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இவற்றின் அமைப்புகள், சமய, தத்துவ, கலை நுணுக்கங்கள் சிலவற்றைப் பொதுவாகக் குறிப்பிடலாம்.

## பிள்ளையார் சிலை

இது 18 அங்குல உயரம் கொண்டது. விநாயகப் பெருமான் பெருச்சாளி வாகனத்திலே வீற்றிருக்கிறார். அவர் வீற்றிருக்கும் ஊர்தியோடு சேர்ந்த பீடம் 3 அங்குல உயரமுடையது. அவரின் முகபாவம் நன்கு அமைந்துள்ளது. திருமுடி கரண்ட மகுடமாக[6]ச் சற்றுப் பின்நோக்கியுள்ளது. இதிலே 6 புரிகள் உள்ளன: அவரின் நான்கு திருக்கரங்களிலே முன் வலக் கையிலே ஒடித்த மருப்பும், இடக்கையிலே மோதகமும, பின் வலக்கையில் அங்குசமும், இடக்கையிலே பாசமும் காணப்படுகின்றன. துதிக்கை இடம்புரியாக இடக்கையிலுள்ள மோதகத்தினைத் திருவமுது செய்கின்றது. ஊர்தியான பெருச்சாளி வலப்புறமாகத் திரும்பியுள்ளது. பக்தர்களுக்காக அவர் என்றும் ஆயத்தமாக இருப்பதைக் காட்டுகின்றது போலும். வலதுகாலை ஊன்றிக்கொண்டும், இடதுகாலை மடித்துக்கொண்டும் அவர் வீற்றிருக்கும் நிலை கம்பீரமாக விளங்குகின்றது. விநாயகரின் ஷோடஷ (16) மூர்த்தங்களிலே இந்நிலையினைப் பக்தவிநாயகமூர்த்தம் எனலாம். பொதுவாகப் பல ஆலயங்களிலே காணப்படுவது இம்மூர்த்தமேயாம்.

## முருகக்கடவுள், வள்ளியம்மன், தெய்வயானையம்மன் சிலைகள்

முருகப்பிரானதும் அவரின் இரு சக்திகளினதும் சிலைகள் நிற்கும் நிலையிலே மிளிர்கின்றன. முருகப்பிரானின் சிலை 27 அங்குல உயரமும் சக்திகளின் சிலை சுமார் 22 அங்குல உயரமும் கொண்டவை. இம்மூவரின் கரண்ட மகுடங்கள் நேராக விளங்குவன. முருகனின் கரண்ட மகுடம் 6 புரிகள் கொண்டது. அவரின் நான்கு திருக்கரங்களிலே முன்வலக்கரம் அபயகரமாகவும், இடதுகரம் கத்யாவலம்பிதமாக (தொங்கலாக) இடது அரைப்பாகத்தினைத் தொடுகின்றது. பின் வலக்கரத்திலே வச்சிரமும், இடக்கரத்திலே வேலும் காணப்படுகின்றன. அரையில் ஆடையும், கழுத்து, மார்பு, கை, கால் முதலியவற்றிலே ஆபரணங்களும் உள்ளன. பின்புறமாக உள்ள மயில் அழகு ஒளிர இடப்புறம் நோக்கிப் பாம்பினை வாயில் வைத்துக்கொண்டிருக்கிறது.

இத்தகைய நிலையிலிது காணப்படுவது அருமை.

இடதுபக்கமுள்ள தெய்வயானையம்மனின் வலது திருக்கரத்திலே நீலோற்பல மலர் உள்ளது; இடதுகரம் கத்யாவலம்பிதமாகக் காணப்படுகிறது. வலதுகாலை நன்கு ஊன்றியும் இடதுகாலைச் சற்றுச் சரித்தும் வைத்துக்கொண்டிருக்கிறார். வலப்புறமுள்ள வள்ளிநாயகியின் இடது திருக்கரத்திலே தாமரைப்பூவுண்டு; இடதுகரம் கத்யாவலம்பிதமாகக் காட்சியளிக்கின்றது. இருவரும் மேலாடை, சேலை, ஆபரணங்கள், வளையல்கள் அணிந்து விளங்குகின்றனர்.

## கஜலக்ஷ்மி

தாமரை மலராசனத்திலே லக்ஷ்மிதேவி வீற்றிருக்கிறார். அவரின்சிலை 24 அங்குலமும், பீடம் 5 அங்குலமும் கொண்டவை. அவரின் நான்கு திருக்கரங்களிலே முன்வலக்கையான அபயகரம் ஒடிந்துவிட்டது. முன்இடக்கரம் வரதகரமாக நேர்த்தியாக உள்ளது; பின்இடக் கையிலும், வலக்கையிலும் தாமரைப் பூக்கள் எழிலுடன் இலங்குகின்றன. லக்ஷ்மி வலதுகாலைச் சற்று மடித்தும், இடதுகாலை மடித்தும் வீற்றிருக்கிறார். முகபாவம் அழகுடன் மிளிர்கின்றது. கிரீடம் கரண்டமகுடமாக நேர்த்தியாக உள்ளது. இதில் 8 புரிகள் உள்ளன. மேலாடை, சேலை, ஆபரணங்கள், வளையல்கள் அணிந்து லக்ஷ்மி திகழுகிறார். இருமருங்கிலும் தத்தம் முன் கால்களிரண்டினையும் தூக்கி லக்ஷ்மியின் திருப்பீடத்தின் விளிம்பிலே வைத்துக்கொண்டு, கம்பீரமான தோற்றத்துடன் விளங்கும் யானைகள் தத்தம் துதிக்கையினாலே நீரினைத் தேவியின் பின் கரங்களிலுள்ள பூக்களின் மீது சொரிகின்றன. யானைகளுக்கு மேல் இருமருங்கும் வளைவுகள் திருவாசிபோல அமைந்துள்ளன. இவையாவும் ஒரே கல்லிலே செதுக்கப்பட்டுள்ளன. அபயகரமில்லாவிடினும், முழுமையான கலையழகும், நேர்த்தியும் கொண்டவை. சில வகைகளில் இவ்வடிவம் முற்பட்டகால யாழ்ப்பாணத்திலும் நிலவிய லக்ஷ்மி நாணயங்களிலே காணப்படும் கஜலக்ஷ்மி வடிவத்தை நினைவூட்டுகின்றது.[7]

## தக்ஷிணாமூர்த்தி

இச்சிலை 15 அங்குல உயரமும் இதன பீடமான மலை (கைலாயமலை) 12 அங்குலமும் கொண்டவை. சிவபெருமான் தக்ஷிணாமூர்த்தி வடிவிலே, ஒரு திருக்காலினை மற்றைய தொடையின்மீது வைத்துக்கொண்டு, தொங்கும் திருக்காலினால் அபஸ்மார புருஷனை மிதித்தவாறு வீற்றிருக்கிறார்; தலையிலே ஜடாபாரம் உள்ளது.

இவரின் நான்கு திருக்கரங்களிலே முன்வலக்கை அபயஹஸ்தமாக உண்மையான ஞானத்தினை அறிவுறுத்தும் சின்முத்திரை (சம்தர்சன அல்லது ஞானமுத்திரை)யினை உருத்திராக்ஷமாலையுடன் மிக நேர்த்தியாகத் தெளிவுறுத்துகிறது; முன் இடக்கை மடித்த இடதுகாலிலேதொங்குகிறது; பின்வலக் கையிலே நெருப்புண்டு; இடக்கையிலே சர்ப்பமோ வேறு சின்னமோ உண்டு. கண்கள் மூக்கின் நுனியினை நோக்குகின்றன. உடல் நேராக ஞானாசிரியனின் திருவுள்ளத்தின் உறுதியினைக் காட்டுதற்குப் போலும் நிமிர்ந்து மிளிர்கின்றது.

கைலாய மலையிலே கல்லால விருக்ஷத்தின் கீழிருந்து ஜனகர் முதலிய முனிவர்களுக்குச் சிவபிரான் தக்ஷிணாமூர்த்தியாக ஞானோபதேசம் செய்தார் எனச் சைவ நூல்கள் கூறும். தக்ஷிணாமூர்த்தி வடிவங்கள் நான்கிலே[8] பொதுவாகப் பலவிடங்களிலே காணப்படும் வியாக்கியான தக்ஷிணாமூர்த்தி வடிவத்தினையே இங்கு கண்டுபொலியக் காணலாம். அஞ்ஞான இருளைச் சுட்டும் அபஸ்மார புருஷனை மிதித்துக் கொண்டு மெஞ்ஞான ஒளியினைக் காட்டும் இறைவனின் நிலை குறிப்பிடற்பாலது. இறைவனே ஞானாசிரியனாக எழுந்தருளி இறவா நெறிகாட்டும் நிலை சமய தத்துவ ரீதியிலே மட்டுமன்றிக் கலை ரீதியிலும் சிறப்பாகவே இலங்குகிறது.

## சனீஸ்வரன்

சனிபகவான் காகத்தின் மீது தன் வலக்காலை வைத்துக் கொண்டு, இடக்காலைத் தொங்கவிட்டுக் கொண்டுவீற்றிருக்கிறார். வலப்புறம் திரும்பியுள்ள தம் ஊர்தியின் மீது ஏறிப் புறப்படுபவர் போலக் காணப்படுகிறார். இவருக்கும் கரண்டமகுடமேயுள்ளது. இவரின் நான்கு திருக்கரங்களிலே முன்வலக்கை அபயகரமாகவும், முன் இடக்கை வரதகரமாகவும் சௌந்தரியமாகத் திகழ்கின்றன. பின்வலக்கை ஒடிந்துவிட்டது. சனீஸ்வரன் என்று கூறும்போது பலருக்குப் பயமும், வெறுப்பும் ஏற்படுவதுண்டு. ஆனால் இங்கு அவர் அடியவருக்கு இன்னருள் புரிதற்கு என்று ஆயத்தமாக அழகாக விளங்குகிறார்.

## காவல்தெய்வம் (?)

வலது காலினை ஊன்றிக் கொண்டும், இடதுகாலை மடித்துக் கொண்டும் இத்தெய்வம் வீற்றிருக்கிறது. கரண்டமகுடமுண்டு. ஒரளவுதியான நிலையும் காணப்படுகிறது. இரு திருக்கரங்களில் இடதுகை முழந்தாளினைத் தொடுகிறது. வலதுகையில் ஓர் ஆயுதமுண்டு. அது கதா அல்லது பரசு ஆக இருக்கலாம். இத்தெய்வம் ஐயனார் அல்லது குபேரன் அல்லது ஒரு காவல் தெய்வமாயிருக்கலாம்.

இச்சிலைகள் யாவற்றினையும் தொகுத்து நோக்கும்போது இவை சுமார் கி. பி. 14—16 நூற்றாண்டு காலப் பகுதியினைச் சேர்ந்தன எனலாம். யாழ்ப்பாண அரசினை ஆண்ட சிங்கையாரியராசன் தலைநகரின் வடபால் சட்டநாதேஸ்வரர் கோவிலைக் கட்டுவித்தான் என யாழ்ப்பாண வைபவ மாலை கூறும்[9]. எனவே, இவன் காலத்திலோ அல்லது இவனுக்குப்பின் (போத்துக்கேயர் கைப்பற்றுமுன்) அமைக்கப்பட்ட சிலைகளாயிருக்கலாம். இவற்றின் சிறபப்பாணி சமகாலத் தென்இந்தியச் சிற்ப நடையினை நன்கு நினைவூட்டுகின்றது. இத்தகைய சிலைகள் ஈழத்தின் பிறபகுதிகளிலிதுவரை கிடைத்தில. வெண்கலத்தினாலான நேர்த்தியான நடராஜர் சிலை போன்றவை இலங்கையின் பிற இடங்களிற் கிடைத்துள்ளன. யாழ்ப்பாணத்திலே இன்றுவரை கிடைத்துள்ள காலத்தால் முந்திய சைவசமயச் சிலைகள் இவையேயாம்; இவ்வகையிலுமிவை முக்கியத்துவம் வாயந்தவை. சமகாலத் தென்னிந்தியச் சிலைகளிலும் பார்க்கத் தரம் குறைந்தவையல்ல. குறிப்பாகத் தக்ஷிணாமூர்த்தி, கஜலக்ஷ்மி சிலைகள் கவனிததற்பாலன.

## மரத்தால் செய்த அம்மன் சிலை

நல்லூரிலுள்ள யமுனாரியிலிருந்து மீட்கப்பட்டதாகக் கூறப்படும் இச்சிலை முற்குறிப்பிட்டனவற்றைப் போன்று பழமையற்றதாயினும் கலையழகு கொண்டது. அம்மனுக்கு கரண்டமகுடமுண்டு. நான்கு திருக்கரங்களிலே முன்வலக்கை அபயகரமாகவும், இடக்கை வரதகரமாகவும் காட்சியளிக்கின்றன, இச்சிலை உயரம 21 அங்குலமாகும். அமமனின் முகபாவம் நன்கு அமைநதுள்ளது.

வி. சிவசாமி, M. A. (Cey.)
வரலாற்று விரிவுரையாளர்,
யாழ்ப்பாணக் கல்லூரி.

அடிக்குறிப்புகள் :

1. முத்துக்குமாரசுவாமி வை. "நல்லூர்க் கந்தசுவாமி கோவில்" ஸ்ரீலங்கா II. ஆகஸ்டு 1950. ப. 12-14, 41.
2. கட்டுரையாசிரியரும் நண்பர் திரு. அ. செல்வரத்தினம் (கலைஞானி) அவர்களும் சென்ற ஆண்டு பூதராயர் கோவிலுக்குச் சென்றபோது இத்தகவலைப் பெற முடிந்தது.
3. மயில்வாகனப் புலவர் யாழ்ப்பாண வைபவ மாலை குல சபாநாதன் பதிப்பு சுன்னாகம் 1949 ப. 80-81
4. கலைப்புலவர் நவரத்தினம் இலங்கையிற் கலைவளர்ச்சி குரும்பசிட்டி 1954 ப. 48
5. மேற்படி.
6. Gopinatha Rao T. Elements of Hindu Leonography Vol. 1. Part 1. Madras 1914. P. 29,
7. Codrington H. W. Ceylon Coins and Currency Colombo 1924 P. 26-31 Notes 20–25.
8. ஞான தக்ஷிணாமூர்த்தி, யோக தக்ஷிணாமூர்த்தி, வீணாதர தக்ஷிணாமூர்த்தி எனபன பிற மூன்றுமாம்.
9. மயில்வாகனப் புலவர் மேற்குறிப்பிட்டநூல் ப. 26-27

பிற உசாத்துணை நூல்கள்

1. Gopinatha Rao-Elements of Hindu Iconography
Vol. I. Part I. Madras 1914
,, I. ,, II. ,, 1914
,, II. ,, I. ,, 1916
,, II. ,, II. ,, 1916
2. Coomaraswamy Ananda K. Bronzes from Ceylon chiefly in the Colombo museum. Ceylon 1914

# 'கலைக்கண்' வாழ்க!

திருமதி R. காதிர், பள்ளித்துணை தணிக்கையாளர்,
எழுமூர் சரகம், சென்னை.

கல்வி, கலை, கலாசார காப்புக் கழகத்தின் தனிச் சிறந்த மலர் "கலைக்கண்" ஆண்டு நிறைவு பெற்றுள்ளது. மேன் மேலும் ஓங்கி வளர்க.

பொய்யும், புரட்டும், புரளியும், வெகுளியும் மலிந்துள்ள இக்காலத்தில் மெய்யும் திரட்டும் விழிகளாய் இயங்கும் "கலைக்கண்" வாழ்க என மனமார வாழ்த்துகின்றேன்.

ஆண்டு மலர்தனை எனக்குத் தந்த கலைஞர் பெனடிக்ற் அவர்களை ஆசிரியர் மையக்கூட்டத்தினில் சந்திக்கும் வாய்ப்பினைப் பெற்றேன். அன்னாரின் சொற்பெருக்காற்றலும், கலைத்திறனும் உயர்ந்த வேதாந்த சிந்தனையுடையதாயிருந்தது. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற கூற்றினை மெய்ப்பிக்க நன்முயற்சி எடுக்கின்றார். அவரது சொற்பொழிவு ஆசிரியப் பெருமக்களுக்கு ஏற்றதாகவும், பண்பாட்டினை நினைவுபடுத்திச் சிந்தனைச் சிற்பிகளாகத் திகழ்ந்து, செயல் முறையில் ஈடுபடுதலை வலியுறுத்தியதாகவும் இருந்தது. ஆழ்ந்த கருத்துக்களைத் தெள்ளத் தெளிவென இசையுடன் கலந்து, ஓவியத்துடன் சிறப்பித்து, திறம்பட எடுத்துரைத்தார்.

# பயணத்தின் எல்லையிலே!

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

"என்ன நேரம் பத்து மணியாச்சா" என்று கேட்ட சிவஞானசுந்தரம் "சரி மல்லிகா மிச்சத்தை நாளைக்குப் பாப்பம்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட ஆயத்தமானான்.

"கொஞ்சம் நில்லுங்கோ மாஸ்டர் ரோஜ்லெட் கொண்டு வந்துதாறன். நாளைக்கு வரேக்கை கொண்டு வாருங்கோ" என்று சொல்லிக் கொண்டு உள்ளே ஓடிய அவள் மறு நிமிடம் ஒரு ரோஜ்லெட்டுடன் வந்தாள்.

அதை வாங்கிக் கொண்டு அவன் புறப்பட்டான்.

மல்லிகாதேவி கொடுத்த ரோஜ்லெட்டிலிருந்து புறப்பட்ட ஒளி மிகுந்த தூரம் வியாபித்து நீண்டு கொண்டிருந்தது. அதைப் பிடித்தபடி வந்துகொண்டிருந்த சிவஞானசுந்தரத்தின் இதயத்திலும் அவள் பற்றிய இன்ப நினைவுகள் நீண்டுகொண்டிருந்தன.

அவன் முதன் முதலாக அவளுக்கு ரியூஷன் சொல்லிக்கொடுக்க வந்தபொழுது அவள் எல்லாப் பெண்களையும்போல் அவள் சோட்டி அணிந்திருந்தாள். அதனால் அவன் அவளைப் பார்க்கவே இல்லை.

இரண்டு மூன்று நாள் குனிந்த நிலையிற் புத்தகத்தைப் பார்த்தபடி பாடம் சொல்லிக் கொண்டு வந்த அவன் மூன்றும் நாள் சற்றே துணிச்சலை வரவழைத்தவனாய் "மல்லிகாதேவி! நான் ஒண்டு சொல்லுறன் நீர் குறை நினைக்கக் கூடாது..." என்று இழுத்தான்.

"என்ன மாஸ்டர் தயங்கிறியள். நீங்கள் எதையும் தாராளமாய்ச் சொல்லலாம்" என்றாள் அவள்.

"ஒண்டுமில்லை இந்த உடுப்போடை உம்மைப் பார்க்க எனக்கு ஒரே அருவருப்பாயிருக்கு. அதனாலை குனிந்த நிலையிலை பாடம் சொல்லிச் சொல்லி என்ரை கழுத்தும் சுளுக்கிப் போட்டுது" என்றான் அவன் தயங்கித் தயங்கி.

"என்ன மாஸ்டர் மேல் நாட்டிலையெல்லாம் இது தானே ஃபாஷன்".

"சும்மாயிரும் பிள்ளை. கவுண்போட்ட எத்தனையோ வெள்ளைக்காரப பொம்பிளையளெல்லாம் சில, சட்டை உடுத்துக் கண்ணுக்கு குளிர்ச்சியாய் திரியேக்கை சில, சட்டை உடுத்த எங்கடை பொம்பிளையள் கவுண் போட்டுக்கொண்டு அலங்கோலமாய் திரியிறதை நினைச்சா என்ன சொல்லுறதெண்டு தெரியேல்லை."

"அப்ப நான் என்ன செய்யிறது மாஸ்டர்"

"நீர் நாளையிலை இருந்து சாறி உடுத்துக்கொண்டு வந்தால் நல்லாயிருக்கும். அதோடை என்ரை கழுத்துச் சுளுக்கும் எடுபடும்.

நிச்சயமாய் உங்கடை கழுத்துச் சுளுக்கு எடுபடுறதுக்காவது நான் சாறி உடுக்கிறன் என்று சொல்லி அவள் சிரித்தாள்.

என்ன ஆச்சரியம்! அடுத்தநாள் அவன் அந்தப் பவனத்திற்குள் நுழைந்த பொழுது முதல்நாள் சோட்டி அணிந்து அலங்கோலமாகக் காட்சியளித்த அவள் அழகான சேலை, சட்டை அணிந்து ஒரு தரத்துக்கு இரண்டுதரம் பார்க்கக்கூடிய அழகிய தமிழ் மகள்போல் காட்சியளிக்க ஆரம்பித்தாள்.

இவ்வாறு அவன் சொன்னபடியெல்லாம் செய்து வந்த அவள் அழகுடையவளாக மட்டும் இருக்கவில்லை. அருமையான குணமுடையவளாகவும் இருந்தாள். இதுவரையில் அவன் எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கிறான்; பழகியிருக்கிறான். ஆனால் அவளைப்போல் அழகும், குணமும் ஒருங்கே அமையப்பெற்ற பெண்ணைப் பார்த்ததுமில்லை; பழகியதுமில்லை.

இப்படிப்பட்ட மல்லிகா தேவியுடன் பழகுவதற்குக் கட்டணமாகத் தான் இராமநாதனிடம் 25 ரூபா வாங்குவதற்குப் பதிலாக அவருக்கு 25 ரூபா என்ன 250 ரூபா கொடுத்தாலும் தகும் என்றெண்ணிய சிவஞானசுந்தரம் அவள் மட்டும் தனக்கு மனைவியாக வந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். முதலில் ஓட்டைச் சைக்கிளிலிருந்து விடுதலை கிடைத்து ஊர்சுற்ற அழகான கார் கிடைக்கும். செலவழிக்கக் காசு கிடைக்கும். எல்லாவற்றிற்கு மேலாகத் தினமும் வாய்க்கு ருசியான நல்ல சாப்பாடு கிடைக்கும் என்று எண்ணினான்.

அப்பொழுது சற்றுமுன் அவன் மல்லிகாதேவியின் கையால் சாப்பிட்ட சுவை மிக்க ஆடிக்கூழ், கொழுக்கட்டைகள் ஞாபகத்துக்கு வந்தன. அவற்றால் அவன் நாவு இனித்தது. அத்துடன் அவள் பற்றிய நினைவுகளால் அவன் மனமும் இனித்தது.

இவ்வாறு எல்லையற்ற துன்பங்களுக்கு மத்தியிலே அவன் மல்லிகாதேவி பற்றிய நினைவுகளால் இன்பம் அனுபவிப்பதுகூட விதிக்குப் பொறுக்கவில்லை.

இங்கே சிவஞானசுந்தரத்தின் மனம் 'எப்படி மல்லிகாதேவியை மணக்கலாம்?' என்று திட்டம் போட்டுக் கொண்டிருந்த அதே வேளையில் அங்கே விதி வேறு விதமாகத் திட்டம் போட்டுக்கொண்டிருந்தது.

ஆவணிமாதம் பிறந்து விட்டது. அத்துடன் ஆடி மாதம்போல் அவதிப்பட்டுக் கொண்டிருந்த எத்தனையோ ஆண் பெண்களுக்கு இன்ப வாழ்வும் பிறக்கத் தொடங்கின. அதை ஊரெங்கும் அறிவிக்கும் வகையில் மங்கல மேளங்கள் மனதைக் கிறுகிறுக்கவைக்கும் சினிமாக் கீதங்கள் ஆங்காங்கே முழங்கத் தொடங்கின.

### புலவர் தமிழ்மாறன்

இதற்கு கோப்பாயிலுள்ள மல்லிகா பவனமும் தப்பவில்லை.

அந்தப் பவனத்தின் முற்றத்திலே போடப்பட்ட பிரமாண்டமான பந்தலிலே கெட்டி மேளங்கள் கொட்டி முழங்க மக்கள் கூட்டம் மகிழ்ச்சியால் ஆரவாரிக்க மல்லிகாதேவியின் திருமணம் மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

மணவறையிலே மல்லிகா தேவி கொண்டை நிறைய மல்லிகைப் பூவுடன் உட்

### சிறுகதை

கார்ந்திருந்தாள். அவளுக்கு அருகிலே சிவஞானசுந்தரம் உட்கார்ந்திருந்தானோ என்றால் இல்லை. எதிர்மாறாக அவனுக்குப் பதிலாக ஒரு டீ. ஆர். ஓ. இளைஞன் உதடு நிறையச் சிரிப்புடன் உட்கார்ந்திருந்தான். அதேவேளையில் மணவறையில் மாப்பிள்ளையாக உட்காரவேண்டிய சிவஞானசுந்தரம் சபையிலே சாதாரண ஒரு பார்வையாளனாக உட்கார்ந்து ஊமை அழுகை அழுது கொண்டிருந்தான்.

அவனுடைய கண்கள் கடைசித் தடவையாக மல்லிகாதேவியின் முகத்தை ஏறிட்டு நோக்கின. அங்கே அவளது முகம்தெரியவில்லை. எதிர் மாறாக அவள் அவன் சொற்படி சேலை, சட்டை அணிந்து வரவேற்ற காட்சி தெரிந்தது; மிக அருகிலேயே உட்கார்ந்து பாடம் கேட்டதும் இடைக்கிடை அவன் விடும் பகிடிகளைக் கேட்டு மல்லிகைச் சிரிப்புச் சிரித்த கட்டங்கள் தெரிந்தன. இறுதியாக ஆடிப்பிறப்பன்று கூழ், கொழுக்கட்டைகள் தந்து 'எப்படி இருக்குது' என்று கேட்டது தெரிந்தது.

இதற்கிடையே அந்தத் திருமண நாடகத்திலே மணமக்களுக்கு அறுகரிசிபோடும் கட்டம் ஆரம்பமாகியது. ஒவ்வொருவராக எழுந்து தலைப் பாகட்டியபடி சென்று அறுகரிசி போட ஆரம்பித்தார்கள்.

தற்செயலாக சிவஞானசுந்தரம் இருந்த பக்கம் வந்த இராமநாதன் "என்ன மாஸ்டர் உங்களை எங்கையெல்லாம் தேடுறது. ஒருக்கால் பொம்பிளை மாப்பிளையை வாழ்த்தி ஒரு பேச்சுப் பேசினியளென்றால் மிகச் சிறப்பாக இருக்கும்" என்று வற்புறுத்தவே அவன் வேறு வழியின்றி எழுந்து மைக் இருந்த இடத்தை நோக்கிச் சென்றான்.

கம்பீரமான குரலில் அனைவரையும் கவரத்தக்க வகையில் மணமக்களை அறிமுகப்படுத்திய அவன் அவர்கள் எப்படி வாழ வேண்டும் என்று இலக்கியங்களிலிருந்து மேற்கோளகளுடன் எடுத்துக்காட்டி அவர்கள் எங்கிருந்தாலும் கிரிமலை நீரூற்றுப்போல் எக்காலமும் குளிர்மையாக வாழ வேண்டும் என்று வாழ்த்தினான்.

அடுத்தகணம் அவனது ஆத்மாவின் அழுகைக் கீதத்தைப் பிரதிபலிக்கும் வகையில் ஒலிபெருக்கியும் 'வாழ்க எங்கிருந்தாலும் வாழ்க' என்ற சோக கீதத்தை முழங்க ஆரம்பித்தது

அதையடுத்து பயித்தம் பணியாரம் போன்ற பலகாரங்கள் பரிமாறப்பட்டன. மரியாதைக்காக சிவஞானசுந்தரமும் இரண்டு மூன்று பலகாரங்களை வகைக்கொன்றாக எடுத்துச் சாப்பிட்டான். ஆனால் அந்தப் பலகாரங்கள் அவன் முன்பு அந்த வீட்டில் சாப்பிடும் பலகாரம்போல் இனிக்காமல் ஆடி அமாவாசைக்குப் பொரிக்கப்படும் காத்தோட்டிக்காய்ப் பொரியல்கள்போல் கசந்தன.

அதற்குமேலும் சிவஞானசுந்தரம் அங்கு நிற்கப் பிடிக்காமல் வெளியேறினான்.

அன்று வெள்ளிக்கிழமை. கோப்பாய் அரசினர் சபாபதி நாவலர் கல்லூரியில் நண்பகல் இடைவேளைக்கான கடைசிப்பாடம் நடந்து கொண்டிருந்தது.

எல்லா வகுப்புகளையும் பரிசோதித்துவிட்டுசிவஞானசுந்தரம் தமிழ் படிப்பித்துக் கொண்டிருந்த ஏச். எஸ். ஸி வகுப்பிற்குள் நுழைந்த வட்டாரக் கல்விப் பரிசோதகர் சந்திரசேகரம் மறுகணம் திகைத்துப்போய் 'அட சிவஞானசுந்தரமா? என்று கேட்டார்.

அக் குரல்கேட்டு இலக்கிய உலகிலிருந்து விடுபட்டு இவ்வுலகிற்கு வந்த சிவஞானசுந்தரமும் என்றோ ஒரு காலத்தில் தன்னுடன் இலங்கைப் பல்கலைக்கழகத்தில ஒன்றாகப் படித்து அப்பொழுது வட்டாரக் கல்விப் பரிசோதகராக வந்து நிற்கும் சந்திரசேகரத்தைக் கண்டு திகைத்துப்போய் "ஆர் சந்திரசேகரமா?" என்று கேட்டான்.

இவ்வாறு தம்மை மறந்து சுயவிசாரணையிலீடுபட்ட அவ்விருவரும் மறுகணம் உத்தியோகவிசாரணையிலீடுபட்டனர்.

அது முடிவதற்கும் நண்பகல் இடைவேளை மணி அடிப்பதற்கும் சரியாக இருந்தது.

இடைவேளை மணி அடித்ததுதான் தாமதம் அது வரை அரைவாசிக் கதிரையிலிருந்த மாணவர் கூட்டம் விழுந்தடித்துக் கொண்டு அங்கிருந்து வெளியேறியது. அதைத் தொடர்ந்து ஆசிரியர் சிவஞானசுந்தரமும், ஸ்கூல் இன்ஸ்பெக்டர் சந்திரசேகரமும் ஒன்றாக வெளியேறினர்.

நீண்ட காலத்துக்குப் பிறகு சந்தித்த நண்பன் சந்திரசேகரத்தைக் கல்லூரிக்கு முன்னாலுள்ள உணவுக் கடைக்கு அழைத்துக் கொண்டுபோய்த் தேநீர் பலகாரங்கள் வாங்கிக்கொடுக்க வேண்டும் என்று எண்ணிய சிவஞானசுந்தரம் மறுகணம் தன் நெஞ்சுக்கு அருகிலுள்ள சட்டைப்பையைத் தடவிப் பார்த்தான். அதற்குள் அவன் மத்தியானம் தேநீர் அருந்தக் கூடியதாகப் பத்துச் சதம் மட்டும் இருக்கவே உடனடியாக அந்த ஆசையைக் கைவிட்டான்.

ஒரு காலத்தில் மல்லிகா தேவிக்கு ரியூஷன் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்த பொழுது அவன் கையில் எந்த நேரமும் இரண்டு, மூன்று ரூபாய் நோட்டுகள் புழங்கின. அவள் கல்யாணமாகிப்போய் ரியூஷனும் நின்ற பிறகு அவன் கையில் 5 சத, 10 சத சில்லறைகளே புழங்க ஆரம்பித்தன.

இதற்கிடையே "வா மச்சான்" கடையிலை தேத்தண்ணி, பலகாரம் அடிப்பம்" என்று சந்திரசேகரமே வாய்விட்டுக் கேட்டுவிட்டான்.

அதைக் கேட்டு கூனிக் குறுகிப்போன சிவஞானசுந்தரம் "சா இப்ப எனனததுக்குச் சாப்பாட்டுநேரம்" என்று சொல்லித் தட்டிக்கழிக்கப் பார்த்தான்.

ஆனால் சந்திரசேகரமோ விடுவதாக இல்லை.

வேறு வழியின்றி அவனைப் பின் தொடர்ந்து சென்ற சிவஞானசுந்தரம் கடையிலே அவன் வாங்கிக் கொடுத்த தேநீர் பலகாரங்களை அருந்திவிட்டுப் பரிதாபமாக அவனுக்கு விடைகொடுத்து அனுப்பினான்.

"சா என்ன வாழ்க்கை! என்ன உத்தியோகம்! வாற சிநேகிதர்களுக்கு அவனால் ஒரு பிளேன் டீ பலகாரம் வாங்கிக் குடுக்க முடியாட்டா இந்த நாட்டிலை சீவிச்சுத்தான் என்ன? உத்தியோகம் பார்த்துத்தான் என்ன?" என்று சிவஞானசுந்தரம் அன்று தன்னைத்தான் நொந்ததுபோல் வேறு எக்காலமும் நொந்ததில்லை.

அப்பொழுது இரவு 10 மணியிருக்கும். இருபாலையிலே ஒரு வீட்டிலே சிவஞானசுந்தரம் ரியூஷன் சொல்லிக்கொடுத்து விட்டு சைக்கிளை எடுக்க முற்பட்ட பொழுது அது காற்றுப் போய்க் கிடந்தது.

அடுத்தகணம் அவன் சைக்கிளை அவர்களுடைய வீட்டிலே விட்டுவிட்டு வீடு நோக்கி நடக்கத் தொடங்கினான்.

அவன் பிரதான வீதியிலுள்ள அஞ்சல் நிலையத்தை நெருங்கவில்லை. அதற்குள் அவனுக்கருகிலே ஒரு கார் மெதுவாக வந்து நின்றது. அதைத் தொடர்ந்து "ஆ! மாஸ்டரா? என்ன வீட்டை தானே போறியள். நாங்கள் படத்துக்குப் போட்டு வாறம். ஏறுங்கோ வீட்டிலை கொண்டு போய் விடுறம்" என்றொரு

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

'கலைக்கண்'

மாதப் பத்திரிகை

இதனை ஊக்குவிப்பது உங்கள் கடமையாகும்

தனிப்பிரதி சதம் 25

ஆண்டுச் சந்தா — ரூபா 4-00 }
ஆறுமாத சந்தா — ரூபா 2-25 } தபாற் செலவு உட்பட

# பாரதி பாடல்களில் ...............

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கும் முன்னேடி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட வேளையில் சி. வை. தாமோதரம் பிள்ளை, உ. வே. சாமிநாத ஐயர் முதலியோருக்கே பழந்தமிழ் நூல்கள் சிலவற்றின் பெயர்கள் சரிவரத் தெரியாத சூழ்நிலையிலே—சில தமிழ் 'ஆர்வலர்கள்' விநோதமான பெயர்களுடன் சிலபல 'பழந்தமிழ்' நூற்பிரதிகளைப் பற்றிப்பேசலாயினர். உதாரணமாக த. மு. சொர்ணம் பிள்ளை என்பவர் 'இன்னிலை', 'வளசிமுறி' முதலிய நூல்களைத் தாமே இயற்றிப் பழந்தமிழ் நூல்கள் எனப் பறைசாற்றினர். பிற்பட்ட ஆராய்ச்சிகளினுல் இப்பொய்ம்மை ஐயத்திற்கு இடமின்றி அம்பலப்படுத்தப்பட்டதெனினும், இலக்கிய உலகிலே சில காலம் குழப்பத்தையும், மயக்கத்தையும் உண்டாக்கியது என்பதில் ஐயமில்லை. இதுபோன்ற நிகழ்வுகளிலிருந்தும் பாரதி நூல்கள் பாதுகாக்கப்படல் வேண்டும். வெளியிடப்பெற்ற சஞ்சிகைகளிலிருந்து விடுபட்ட கவிதைகளைச் சேர்த்துக் கொள்வது நியாயமானதே. ஆனல் தனிப்பட்டவர்கள் (எவ்வளவுதான் மதிப்புக்குரியவராயினும்) வைத்திருந்ததாகக் கூறப்படும் கையெழுத்துப் பிரதிகளை மிகவும் கவனமாகவே கையாள வேண்டும். அது மட்டுமன்று. இது விஷயத்தில் மூலங்களை விவரிக்கும் மனப்பாங்கும் விரும்பத்தக்கதாகும்.

ஓருதாரணம் காட்டலாம். 'இந்த எமது வெளியீட்டில் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளன'' என்று அருணு பதிப்பகத்தார் பெருமையுடன் அச்சிட்டுள்ள பாரதியார் பாடல்கள் சில பாரதி புதையல்—I என்னும் நூலிலே பாரதி அன்பர் பத்மனபனுல் ஏலவே தொகுக்கப் பெற்றவை. அவற்றிற் சிலவற்றைத் தக்க விளக்கக் குறிப்புக்கள் இன்றி அருணு பதிப்பகத்தார் 'மொட்டையாக'ப் பிரசுரித்திருப்பது கவலைக்குரியதாகும். காட்டாக ''இந்தத் தெய்வம் நமக்கநுகூலம்... ...'' என்று தொடங்கும் பாடல், அருணு பதிப்பில் தலைப்பும் இல்லாமல் ''அமரர் பாரதியார் அவரது மூத்த புதல்வி தங்கம்மாள் அவர்கள் ருதுவான நாள் அன்று பாடியது'' என்ற குறிப்புடன் மாத்திரம் வெளியிடப்பட்டுள்ளது.

ஆனல் ரா. அ. பத்மனபன் தனது தொகுப்பிலே பயன்தரும் தகவல்களைத் தந்துள்ளார். மூலபாடத் திறனய்வுக்கு முக்கியமான தகவல்கள் தொகுப்பாசிரியரது குறிப்பிற் காணப்படுவதால் அதை இங்கே தருகிறேன்.

''புதுவையில்' இந்தியா' பத்திரிகையை நடத்தியவரும், பாரதி, வ. வெ. சு. ஐயர், அரவிந்தர் முதலிய 'சுதேச'த் தலைவர்களுக்குப் பெருந்துணையாக இருந்தவருமான ஸ்ரீமண்டயம் ஸ்ரீநிவாசாச்சாரியாரின் புதல்வி யதுகிரி அம்மாள் எழுதிவைத்திருந்த கையெழுத்துப் பிரதியிலிருந்து கிடைத்த பாடல் இது.

இப்பாடலின் பிரதியைத் தாம் பாரதியாரிடமிருந்து பெற்றதாகவும், பாரதியாரின் மூத்த புதல்வி தங்கம்மாள் ருதுவான தினம் இது பாடப்பெற்றதாகவும் யதுகிரி அம்மாள் தமது பாரதி நினைவுகள் நூலில் குறிப்பிடுகிறர். அந்நூலில் வெளிவந்துள்ள இப்பாடல் பாரதிபாடல் தொகுதிகளிற் சேரவில்லை.''

பத்மனபன் குறிப்பிடும் பாரதி நினைவுகள் என்னும் நூல் 1954ல் வெளிவந்தது: பாரதி புதையல் 1958ல் வெளிவந்தது. இவையிரண்டிலும் இப்பாடல் போதிய குறிப்புரைகளுடன் வெளிவந்திருக்கவும் அருணு பதிப்பு விவரங்கள் கொடுக்காதது பெருங்குறையென்றே கருதவேண்டும்.

மூலபாடத்திறனய்வாளன் ஒருவனுக்கு இவ்விடத்திற் பல சிக்கல்கள் தோன்றும். முதலாவது இப்பாடல் அச்சில் பாரதிகாலத்தில் வெளிவராதது. கையெழுத்துப் பிரதியாக யதுகிரி அம்மாளிடம் இருந்திருக்கிறது. அவரிடம் இருந்து நூலில் அச்சிடப்பெற்றது. பாரதியார் கையெழுத்தில் இருந்ததா, அல்லது அம்மாள் அவர்கள் செய்துகொண்ட பிரதியா? ஏனெனில் யதுகிரி அம்மாள் ''புதுவையில் பாரதியார் இருந்த சமயம் சிறுமியாக இருந்தவர்'' பாரதியாரைப் பற்றிய சிறுவயது மனப்பதிவுகளையே பின்னேக்கி 1938—39இல் எழுதி நூலாக்கினர். ஆகையால் இப்பாடலை அணுகுவதிலும் அங்கீகரிப்பதிலும் சாவதானம் அவசியம். இது போலவே சக்தி வெளியீட்டில் ''புதிதாகச் சேர்க்கப்பெற்ற பாடல்கள்'' என்ற பிற்சேர்க்கையில 'இளசை ஒரு பா ஒரு பஃது' என்னும் பாடல் காணப்படுகிறது. ''இந்தப் பாடல் இதுவரை அச்சேருதது. இதனைப் பாதுகாத்துவைத்திருந்த அன்பர் பாரதியாரின் பள்ளித் தோழரான காந்திமதிநாதபிள்ளை அவர்களின் புதல்வர் 'இசைமணி' கா. சங்கரனுர்'' என்ற குறிப்பு மட்டும் உள்ளது. இவையெல்லாம் மூலபாடத் திறனய்வாளனது கூர்ந்த ஆராய்ச்சிக்கு உரியவை.

(வளரும்)

# பயணத்தின் எல்லையிலே!

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

இனிமையான குரல் அதற்குள்ளிருந்து மிதந்து வந்தது.

ஒரு காலத்திலே சிவஞானத்தின் செவிகளில் நுழைந்து அவன் சிந்தையையெல்லாம் இன்பத்தால் நிரப்பிய அக்குரல் கேட்டு தலைநிமிர்ந்த அவன் மறுகணம் காரின் முன் ஸீட்டைப் பார்த்தபொழுது அங்கே மல்லிகாதேவி மல்லிகைச் சிரிப்புத்தவழ உட்கார்ந்திருந்தாள். அவளுக்கருகிலே டிறைவர் ஆசனத்தில் அவள் கணவன் உட்கார்ந்திருந்தான்.

''ஓ நீங்களா பஸ்ஸுக்கு நிண்டனன். காண இல்லை. அதுதான் அது வாறவரைக்கும் நடப்பம் எண்டு சொல்லி நடக்கத் தொடங்கினன்'' என்று பச்சைப் பொய் ஒன்றைச் சொல்லியவனைச் சிவஞானசுந்தரம், காரின் பின் சீட்டில் ஏறி அமர்ந்தான்.

அடுத்தகணம் கார் புறப்பட்டது. அவர்கள் உரையாடலும் தொடர்ந்தது.

''மாஸ்டர் நீங்கள் ரியூஷன் சொல்லித்தந்ததாலை நான் ஏச். எஸ். ஸி. தமிழிலை டி ஓடை பாஸ்பண்ணியிருக்கிறேன்'' என்ருள் மல்லிகாதேவி பின்புறம் பார்க்கும் வகையில் சற்றே திரும்பி அமர்ந்தவளாய்.

அதே வேளையில் அவள் கணவன் திரும்பாமலே ''ஓம் மாஸ்டர் இப்ப ஏச். எஸ். ஸி. யோடை டீச்சிங் போஸ்றுக்கு கோல் பண்ணியிருக்கு. மல்லிகாதேவியும் அப்ளிக்கேஷன் போட்டிருக்கு. தமிழிலை 'டி' எடுத்தவைக்கு 'பிறிபறன்ஸ்' குடுக்கப்போகினமாம். அந்த முறையிலை உங்கடை புண்ணியத்தாலை என்ரை வைய்வ் ரீச்சராகப் போகுது'' என்று சொன்னன்.

''ரொம்ப சந்தோஷம்'' என்று சிவஞானசுந்தரம் பதில் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது அவனுடைய வீட்டிற்குச் செல்லும் ஒழுங்கை வரவே'' உந்த ஒழுங்கையிலை விட்டுடுங்கோ'' என்று குரல் கொடுத்தான்.

அதற்கிடையே ''அது சரி மாஸ்டர் நீங்கள் எப்ப கலியாணம் கட்டப் போறியள்; எங்களையெல்லாம் கூப்பிட்டு எப்ப சாப்பாடு தரப் போறியள்? என்றொரு கேள்வியை மல்லிகாதேவி எக்கச்சக்கமாய்க் கேட்டு வைத்தாள்.

''இனியென்ன பிள்ளை கலியாணம் அரைவாசிக் காலம் போட்டுது இனி மிச்சக் காலத்தையும் இப்பிடியே ஓட்டவேண்டியது தான்'' என்று சொல்லிக்கொண்டு காரை விட்டு இறங்கிய சிவஞானசுந்தரம் அடுத்தகணம் அவர்களுக்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டு தலைநிமிர்ந்தபொழுது ...... ?

எதிரே வானத்திலே அமாவாசையை அண்மிக் கொண்டிருந்த பிறைச் சந்திரன் அவனுடைய வாழ்க்கையை நினைவூட்டும் வகையில் அரைவாசி தேய்ந்த நிலையில் ஒளிவீசிக் கொண்டிருந்தது




# ஞானப்பிரகாசரும் ..........

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

வான சரித்திரங்கள் சிறுபான்மையினவாயினும் வடமொழிக் கலப்பின்றி இயலமாட்டாதன ஆகின்றன. வடமொழிகளை அடியோடு நீக்கிவிடுவோமாயின் தருக்கம் ஆகிய சில சாஸ்திரங்கள் இருந்த இடமே தெரியாமற்போய் விடும்.''

சுவாமிகளது பன்மொழியறிவு பிறமொழிக் கலப்பின் இன்றியமையாமையை அழுத்தியுரைத்துள்ளமையைக் காணலாம். சுவாமிகள் காலத்திற் பெருநெறிக்குட்பட்டிருந்த தனித் தமிழ்வாதிகளை ஆதரிக்காமையைக் காட்டுகின்றது. எனினும் சுவாமிகள் தமிழ்ச் சொற்கள் இருக்கும்போது அவற்றில் பிறமொழிச் சொற்கள் கலந்து எழுதும் இயல்பை வெறுத்துள்ளமையும் மனங்கொள்வது அவசியமாகும். சுவாமிகள் தமது கட்டுரைகளிலும் நூல்களிலும் தருக்க ஆற்றலும் மொழித் தூய்மையும் கொண்டுள்ளமையும் குறிப்பிடற்பாலதாகும்.

சுவாமிகள் சிந்தனை தமிழர் நாகரிக ஆராய்ச்சியிற் பிற்காலத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்தது.

''பண்டைத் தமிழர்களுடைய கொள்கைகளுக்கும் ஆரியரது கொள்கைகளுக்கும் வேறுபாடுகள் பல தொடக்கத்தில் இருந்தன. ஆரியர் இறந்தபின் அவர்களுக்கு அப்பேறடைதலையே உயர்நிலையாகக் கொண்டிருந்தனர். பண்டைத் தமிழர் இறப்பின் பின்னர் பிறப்பு உண்டென்றும்; பிற பிறப்புக்களினின்றும் விடுதலை பெறுவதே உயர்நிலை என்றும் கருதி வந்தனர். அவர்க்கு அப்பேறடைய ஆரியர் வேள்வி செய்தனர். பண்டைத் தமிழர் பிற நிலையடையச், சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவற்றைப் படிமுறையாக அனுட்டித்தனர். பிற்காலத்தில் வேறுபாடு நீங்கி பண்டைத் தமிழரது கொள்கைகள் வாழ்க்கை முறைகள் ஆரியரால் விரும்பி ஏற்கப்படலாயின''.

இவ்வாறே ஆரிய திராவிட இணைவுபற்றிச் சிந்தனைகளைச் செந்தமிழில் 43, 45ஆம் தொகுதிகளில் எழுதியுள்ளார்.

பல்துறையாற்றலும் ஓயாத தமிழ்ப்பணியும் செய்து கர்மவீரராக விளங்கிய சுவாமிகள் முற்போக்கு உணர்வுகள்கொண்ட சிந்தனுவாதியாவார். இரு நூற்றுண்டுக்கும்உரிய தலையாய அறிஞருள் ஒருவராக விளங்கும் சுவாமிகள் இருபதாம் நூற்றுண்டின் கல்வ்வல்ல உயர்ந்தோர் குழாமில் முழுமுனைப்புடன் செயலாற்றியவர். அன்னருடைய நூற்றுண்டு விழா இரு ஆண்டுகளில் வருகிறது. முழுமையாக அவரை மதிபபிடும் நாளைத் தமிழ் கூறும் நல்லுலகம் எதிர் பார்க்கிறது.

இப்பத்திரிகை, சுன்னுகம், திருமகள் அழுத்தகத்தில் அச்சிடப்பெற்று, யாழ்ப்பாணம், டேவிட் வீதி, 28ஆம் இலக்கத்திலுள்ள திரு. ச. பெனடிக்ற் அவர்களால் வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: புலவர் ம. பார்வதிநாதசிவம். 23-11-73
— ஏ 719/11-73